# தொண்டன்

ஆரம்பம் - 1969-பெப்ரவரி




## சமூகத் தொடர்பு தினச் சிறப்பிதழ்

ஜூலை-ஒகஸ்ட் - 2005

15/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூலை - ஓகஸ்ட் - 2005

மலர்-37 இதழ்-05

**ஆசிரியர்**
J.A.G. இரட்ணகுமார்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/ மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)

# உள்ளே



| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு... | - | 01 |
| புதியதோர் 'ஊடக உலக'... | - | 02 |
| மக்கள் மத்தியில்... | - | 03 |
| இலக்கிய மஞ்சரி | - | 06 |
| மாணவர் பக்கம் | - | 07 |
| எப்பொருள் யார் யார்... | - | 08 |
| திருச்சி கலைக்காவேரி... | - | 11 |
| ஊடகம், சமூகம், பாண்பாடு | - | 13 |
| வன்முறையால் ஏற்படும்.... | - | 15 |
| கவிஞர் வாகரைவாணனின்... | - | 16 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 19 |
| வன்முறையற்ற தொடர்பாடல் | - | 21 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 24 |
| மனக்கோலம் | - | 26 |
| எதற்காக? | - | 28 |
| விவிலியம் கற்போம் | - | 30 |
| அறிவை வளர்ப்போம் | - | 31 |
| விடைகள் | - | 32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் வரும் ஞாயிறு தினத்தை நமது (திரு/மட்) மறைமாவட்டம் சமூகத் தொடர்பு தினமாக அனுசரிக்கிறது. இதனையொட்டி இம்முறை ஜூலை ~ ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களையும் இணைத்து தொடர்புதினச் சிறப்பிதழாகத் தொண்டன் வெளிவருகிறது.

இவ்வாண்டு உலகத் தொடர்புதினத்துக்காக காலஞ்சென்ற திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்கள் 'மக்கள் மத்தியில் புரிந்துணர்வுக்கான பணியில் தொடர்பு சாதனங்கள்' என்னும் தலைப்பில் செய்தியொன்றை விடுத்திருந்தார். (அச்செய்தி முழுமையாக உள்ளே தரப்பட்டுள்ளது)அந்தச் செய்தியில் தொடர்பு சாதனங்களால் உலகம் அடையும் அபரிமிதமான நன்மைகளையும், அதேவேளை குறுகிய அரசியல், வர்த்தக மற்றும் குழு நலன்களுக்காகப் பயன்படுத்தும் பொழுது ஏற்படக்கூடிய தீமைகளையும் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக பொது நன்மைக்காக நேர்மையான அர்ப்பணிப்பை இது கட்டாயம் உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். இதன் பின்னணியில் தொடர்பு சாதனங்களின் செயல்பாடு, பயன்பாடு பற்றிச் சிந்திப்பது அவசியமானதாகும்.

நமது நாட்டிலும் அரச, மற்றும் தனியார் ஊடகங்கள் இயங்கி வருகின்றன. அவை பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை, தகவல்களை செய்திகளை காலை முதல் நள்ளிரவு வரை ~ 24 மணி நேர சேவைகளுமுண்டு~ வழங்கிக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் அந்நிய நாட்டுத் தயாரிப்புக்களான மூன்றாந்தர சினிமாப் படங்களையும், பாடல்களையும், பிற்போக்குத் தனமான, கண்ணீர் வடிக்கும் நாடகங்களையும் தருவதோடு, நுகர்வுக் கலாசாரத்தை வளர்த்து முதலாளித்துவத்தின் பணப் பெட்டிகளை நிறைக்கத் துணைபோகும் 'மேனி மினுக்கி' விளம்பரங்களையும் காட்டிக் கொண்டிருக்கும் ஊடகச் செயற்பாடுகளையிட்டு நாம் விழிப்புணர்வு பெற வேண்டியது அவசியமாகும்.

இந்நாட்டில் ஆழமாகப் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகள் பற்றி நியாயமான, உறுதியான கருத்துக்களை முன்வைக்க முடியாது திண்டாடும் ஊடகங்கள், பக்கச் சார்பானதும் இனங்களுக்கிடையே வகுப்புவாதத்தையும், அமைதியின்மையையும் தூண்டும் குரோதப் பேச்சுக்களையும் பெரிதுபடுத்திக் காட்டுவது எதற்காக? பேரழிவுக்கான விதைகளைத் தூவிச்செல்வதன் மூலம் இவர்கள் சாதிக்க நினைப்பது என்ன?

அனைத்து மக்கள் மத்தியிலும் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் வளர்த்து, சுயமரியாதையும், சமத்துவமும் மிக்க சமுதாயத்தை உருவாக்குவதில் ஊடகங்கள் பொறுப்புணர்வோடு ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்பதே மக்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரது எதிர்ப்பார்ப்பு மாகும்.

– *இணை ஆசிரியர்* –




## இறைவாக்கு

**தீமை உங்களை வெல்ல விடாதீர்கள்,**
**நன்மையினால் தீமையை வெல்லுங்கள்**

உரோ. 12 : 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் 'ஊடக உலகு' புரிகுவோம்!

உலகையே ஊடறுத்துப் பாய்கிறது
ஊடக சமுத்திரம்
உலக விருட்சத்தை உலுப்பி எடுக்கிறது.
ஊடகப் பெருஞ்சோளகம்....!
உள்ளத்தாள்களை எரித்துச் சுவாலித்துக்
'கெக்கரித்து, நகைக்கிறது - ஊடகத் தீ!
புவிக்கோளப் பரிமாணம் அனைத்தையுமே
ஆதிக்கம் செய்கிறது ஊடகக் கோளம்!

இன்றைய வாழ்வியலை அப்படியே வசப்படுத்தி
நிற்கிறது ஊடகப் பெரு வானம்.....!

பூகோளம் கிராமம் ஆனதும்,
புதுமைகள் பொலிவுற்று நிற்பதும்....
சமூகத்தின் நியமக் கோடுகள்
சற்றே நெகிழ்ந்து போனதும்....
உறவுகள் புறவயமாய் நெருங்குவதும்,
அகவயத்தில் அகல்வதுமாய்....
நவீன அலாவூதீன் விளக்காகிப் போன,
இன்றைய ஊடகம்.....!
என்றாலும் - ஆற அமரப், பரிசீலனைப்
பார்வை விரிக்கையில்....
விழுமிய வெளிச்சம் மங்கிட,
விலங்குத் தன்மைகள் சிறகு பரப்பிட
விளம்பரப் போலிகள் மினுக்கிட,
வித்யாசம் என்ற போர்வையில்
அத்துமீறல்கள் அரங்கேற....
வீட்டுக்குள் நுழையும் விஷத்திரை விம்பங்கள்...
சாரமே அற்ற சம்பாஷனை ஒலிகளின் எச்சில்
தெறிப்புகள்....
இணையத்தளங்களில் 'வலை' விரித்தலையும்
வக்கிரப் பிசாசுகள்.....!
ஓ! ஊடகமே!

விஞ்ஞானம் நல்கிய மகத்தான விருது நீ!
துரிதங்களின் பரிவேக சாகஸ வீரனும் நீ!

உன்னால் எங்கள்
மானுட உலகு கண்ட நன்மைகள்
கடல் அளவுதான்! வாஸ்தவம்....
ஆனாலும் - ஆனாலும்....
அந்தப் பிரமாண்ட அநுகூல சமுத்திரத்தில்
ஒரு துளியே ஆனாலும்
நீ தெளிக்கும் விஷத்தை
வீசிடும் அணுக்கதிரை
எப்படி அநுமதிப்போம்!?

தொடர்பாடல் - மனுக்குல நாகரீகப்
பாதையின் மாபெரிய மைற்கல்.
ஒப்புக்கொள்கிறோம்!
தப்புத் தாளங்களை - அற்புதகானமாய்
ஆக்கியே, மனங்களை மாசுறுத்தும்
செப்படித் தனத்தையே சீறிநிற்கின்றோம்!

அடுத்த ஆண்டிலும்
அகிலமளாவிய தொடர்புதினம் அலரும்!
அதே தருணத்தில்
அற்புதச் சொல்லாடல், பட்டறை, புலவோர்
கருத்துப் பரிமாற்றம் எனப் பல அரங்கேறும்....
அடுத்த ஆவணித்திங்கள் மிசையிலும்
அணிபெறும் தொடர்பு தினச் சிறப்பிதழாகி
தொண்டன் உலா வருவான்!
அதற்கு இடையிலே - குடும்ப நிலையிலே,
அகவயத்தளங்களில் - எங்களுக்கேற்ற
'ஊடகம் தன்னை நாமே படைத்திடும்
திராணி பிறக்குமா? -

முறையூர்:
**ச. சசீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 39வது உலகத் தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு காலஞ்சென்ற திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் விடுத்த செய்தி

## “மக்கள் மத்தியில் புரிந்துணர்வுக்கான பணியில் தொடர்பு சாதனங்கள்”

புனித யாக்கோபுவின் திருமுகத்தில் “போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர சகோதரிகள் இவ்வாறு இருத்தலாகாது” (3:10) என்று நாம் வாசிக்கின்றோம். வார்த்தைகள் மக்களை ஒன்றுபடுத்தவும், அல்லது அவர்களைப் பிளவுபடுத்தவும், நட்புறவை உருவாக்கவும், அல்லது வெறுப்பினைத் தூண்டவும் கூடிய அதிமிகு சக்தியை கொண்டுள்ளன என்று வேத நூல்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

ஒருவர் ஒருவருடன் பரிமாறிக் கொள்ளும் வார்த்தைகள் அவர்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதோடு மட்டும் நின்று விடாமல், எந்த மட்டத்தில் அவை நடைபெற்றுக் கொண்டிருந் தாலும் தொடர்பாடல்கள் புரிந்துணர்வை ஏற்படுத்தும் என்று கூறினால் அது பொருத்தமான தொன்றாகும். கிறிஸ்து தந்த எமது மீட்பின் நற்செய்தியைப் பரப்பவும், இணக்கப்பாட்டினை வளர்த்தெடுக்கவும் ஒப்புரவை ஏற்படுத்தவும், நவீன தொழில் நுட்ப சாதனங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் நல்ல வளங்களாக அமைகின்றன. ஆயினும் அவற்றின் துர்ப்பிரயோகம் புரிந்துணராத் தன்மைகளையும், தப்பபிப்பிராயங்களையும், மோதல்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்து சொல்லொணாத் தீமைகளுக்கு இட்டுச் செல்லும். 2005ம் ஆண்டிற்கான உலகத் தொடர்பாடல் தினத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள “மக்கள் மத்தியில் புரிந்துணர்வுக்கான பணியில் - தொடர்புசாதனங்கள்” என்னும் தலைப்பு காலத்திற்கேற்ப முக்கியமான விடயத்தை முன்வைக்கின்றது. இத்தகைய சக்தி மிகு மூலவளங்களினூடாக மனித குடும்பத்தின், சமூகத்தின் ஒற்றுமையைக் கட்டி எழுப்பலாம்.

எந்த இலக்கை அடைவதற்கும் சிறந்த வழி கல்வியே ஆகும். தொடர்பு சாதனங்கள் கோடான கோடி மக்களுக்கு உலகின் ஏனைய பாகங்களைப் பற்றியும், அவற்றின் செய்திகளையும் கலாசாரங்களையும் அறிவாக ஊட்டுகின்றன. இவற்றின் நன்மைமிகு செயல்களைக் கருத்திற் கொண்டு இவற்றை நவீன காலத்தின் முதல் கலாசாரமையம் என அழைக்கலாம்.



பலருக்குத் தகவல், கல்வி என்பனவற்றின் பிரதான சாதனமாகவும் தனிப்பட்டவர்கள், குடும்பங்கள் மற்றும் பரவலான முறையில் சமுதாயத்திற்குள்ளும் அவர்களது வாழ்க்கை நடைமுறையில் தூண்டு தலையும், வழிகாட்டுதலையும் வழங்கும் முக்கிய மான சாதனமாகவும் அமைகிறது. (மீட்புப்பணி -32) துல்லியமான அறிவு புரிந்துணர்வை மேம்படுத்துகின்றது. தப்பபிப்பிராயங்களை நீக்குகின்றது. அதிகமாக அறிந்து கொள்ளும் ஆவலைத் தூண்டுகின்றது. இவற்றினால் உருவாகும் கருத்து வடிவங்கள் நின்று நிலைக்கும் அபிப்பிராயங்களை வலுவாகப் பதிக்கும் அணுகுமுறைகளை வடிவமைக்கக் கூடிய வல்லமையைச் சிறப்பாகக் கொண்டுள்ளன. அவை, ஏனைய சமூக, நாட்டு அங்கத்தவர்களை எப்படிக் கண்ணோக்குவது என்று கற்பிக்கின்ற அதேவேளை அவர்கள் நண்பர்களாகவோ, எதிரிகளாகவோ, நமது கூட்டாளிகளாகவோ, எம்மை எதிர்க்கக்கூடியவர்களாகவோ இருக்கக்கூடும் என்று கருதும் அளவுக்குத்

தந்திரமாக எம் மனதைத் தூண்டி விடுகின்றன.

மற்றவர்கள் விரோதிகள் என்ற மனநிலை உருவகிக்கப்படும்போது மோதலுக்கான விதைகள் தூவப்படுவதால் அது வன்செயலாகவும் யுத்தமாகவும் ஏன் ஓர் இனப்படுகொலையாகவுங் கூட சுலபத்தில் உருவாகலாம். ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் கட்டி எழுப்புவதற்குப் பதிலாக ஊடகங்கள் சமூக, இன, மத குழுக்களிடையே வேற்றுமைகளை உருவாக்கி அச்சத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்த பயன்படுத்தப்படலாம். ஊடகத்திற்குப் பொறுப்பானவர்கள் ஊடகத்திற்கான கருப்பொருளையும், அதற்கான வழிமுறைகளையும் கொடுக்கும் போது அவை மேற்கூறப்பட்ட தீமைகளுக்கு வழிவகுக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தொடர்பு சாதனமானது மக்களிடையே உறவுப் பாலங்களைக் கட்டி அமைதியை நிலைநாட்ட சக்தி வாய்ந்த ஊடகமாக அமைகின்றது. அவற்றின் பணி இன்று பெருமளவில் பரவலாக இடம் பெறும் வன்செயல், கிளர்ச்சி மற்றும் புதுப்புது வன்முறைகள் போன்றவற்றை உடைத்து அமைதிக்கு வழிகோல சக்தியுடையவையாக இருக்கின்றன. "தீமை உங்களை வெல்ல விடாதீர்கள், நன்மையினால் தீமையை வெல்லுங்கள் (உரோ 12/21) என்ற தூய பவுல் அடிகளாரின் வார்த்தைகளுக்கமைய இவ்வாண்டுக்குரிய உலக சமாதானச் செய்தி உருவாக்கப்பட்டது.

மக்களை ஒன்றுபடுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் வழங்கும் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒரு வழியெனில், இயற்கை அனர்த்தம் போன்றவற்றின்போது, அதனை மக்களுக்குத் தெரியப்படுத்தி சுலபமாக உதவிகளைச் சேகரிக்க உதவுவது மற்றுமொரு வழியாகும். அண்மையில் எண்ணற்ற உயிர்களைக் காவுகொண்ட சுனாமிப் பேரழிவின் போது சர்வதேச சமூகம் மிகவிரைவாக அக்கறையோடு செயல்பட்டதைக்காண மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இன்றைய காலகட்டத்தில் செய்திகள் பரவுகின்ற வேகமானது தேவையான உதவிகளைத் திட்டமிட்டு சரியான சமயத்தில் வழங்கக்கூடிய சாத்தியங்களை அதிகரித்துள்ளது. இந்தவகையில் ஊடகங்கள் அளப்பரிய நன்மைகளை ஆற்றமுடியும்.

'ஊடகங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமானால் அவற்றைப் பயன்படுத்துகிறவர்கள் நீதி, ஒழுங்கு முறைகளின் அடிப்படைக் கொள்கைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை நம்பிக்கையோடு பிரயோகிக்கின்றவர்களாக அமைவது அவசியமாகிறது' என 2ம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகிறது. அடிப்படையாக உள்ள நீதிநெறி என்னவென்றால் "மனிதனும் மனித சமுதாயமுமே முடிவும், சமூக தொடர்பாடல் ஊடகங்களின் பண்பாட்டு அளவீடுமாகும். தொடர்பாடல் என்பது மக்களது முழுமையான அபிவிருத்திக்காக ஒருவருடன் ஒருவர் மேற்கொள்ளப்படுவதாக இருக்க வேண்டும்". (தொடர்பாடல் - அறநெறி - 21). எனவே தொடர்பாடல் செய்கிறவர்களே தாம் மற்றவர்களில் விதைக்க விரும்பும் மதிப்பீடுகளையும், அணுகுமுறைகளையும் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய தேவையைக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றிலும் மேலாக பொது நன்மைக்காக நேர்மையான அர்ப்பணிப்பை இது கட்டாயம் உள்ளடக்கியிருக்க வேண்டும். அந்த நன்மையானது குறிப்பிட்ட குழுக்களினதோ, நாடுகளினதோ குறுகிய அக்கறைகளால் வரையறுக்கப்பட்ட நன்மையாக இராமல் அனைவரது நன்மைகளையும், அக்கறைகளையும் அணைத்துப் போவதாக, முழுக்குடும்பத்துக்குமான நன்மையாக அமைதல் வேண்டும். வாழ்க்கைக்கெதிரான இன்றைய சூழ்ச்சிகளினின்றும் தம்மை விலக்கிக் கொள்வதன் மூலம் தொடர்பாளர்கள் உண்மையானதொரு வாழ்க்கைக் கலாசாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வாய்ப்பையும் ஒவ்வொரு மனிதனது மதிப்பீடு, கண்ணியம் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்லும் வாய்ப்பையும் கொண்டிருக்கிறார்கள்.


அனைத்துத் தொடர்பாடல்களது மாதிரிகளும் வடிவமைப்புக்களும் இறைவனது வார்த்தைகளிலே காணப்படுகின்றன. முன்னைய காலங்களில் பல்வேறு விதங்களிலும் இறைவாக்கினர் மூலமாய்ப் பிதாப்பிதாக்களுக்கு அறிவித்த இறைவன் இக்கடைசி நாட்களில் தம் திருமகன் மூலமாய் நமக்கும் அறிவித்துள்ளார். (எபி 1/1) மனுவுருவான வார்த்தையானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையில் ஒரு புதிய உடன் படிக்கையை ஏற்படுத்தினார். அவ்வுடன்படிக்கை எம்மை ஒருவர் ஒருவருடன் சமுதாயத்தில் பிணைக்கவும் செய்கிறது. எப்படியெனில் அவரே எம் சமாதானமுமாகி எம் இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற நடுச்சுவரைத் தகர்த்து" (எபி 2:14) வழிகாட்டியதுபோல் இன்றைய உலகில் மக்களையும் நாடுகளையும் ஒருவர் ஒருவரிடமிருந்து வேறுபடுத்தி, தவறாகப் புரிந்து கொள்ளுதலையும் அவநம்பிக்கையையும் ஊட்டும் வெறுப்புணர்வென்னும் பிரிக்கின்ற சுவர்களை தகர்ந்து விழச் செய்யவேண்டும். இப்பணியில் ஊடகங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தத்தமது பங்கினைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதுதான் இவ்வாண்டு உலகத் தொடர்பு தினத்தில் எனது செபமாக அமைகிறது. அவர்கள் தங்கள் கரங்களில் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி இறையரசு இம் மண்ணில் தொடங்கி விட்டதை எடுத்துக் காட்டும் தெளிவான அடையாளங்களான நட்பு மற்றும் அன்புப் பிணைப்பைப் பலப்படுத்த முன்வருவார்களாக!

- திருத்தந்தை ௨ம் அருள் சின்னப்பர் -
2005 ஜெனவரி 24, வத்திக்கான்



# பாவமப்பா....

பிள்ளையார் கோயில் ஸ்பீக்கர் சத்தம்
பேயலறி ஓய்ந்தது போல்
அணைந்து விட
அலுப்புக்கு மேல் அலுப்பேறி
அயல் வளவு வேப்பையடியில் அமர்ந்திட
புதினத்தாள் புரட்டும் சத்தமொன்று
புலன் தன்னை ஈர்த்திட .
அண்ணாந்து நோக்கினேன்
என்னே புதுமை!
பேயொன்று குந்தியிருந்து பேப்பர் படித்தது
பாவமப்பா சீஸ்பயர். பாவமம்மா பீரொம்ஸ்
என்றபடி சிரித்தது
ஏன் காணும் பேயே
இப்படியொரு கேலியென்றேன்.
பின்ன என்ன மனிசா
ரூபாய்க்கு ரெண்டு கொலை
மலிவு விலையில் மரணங்கள்
உங்கள் குழந்தை குட்டிகளுக்கு
நிலாச்சோறூட்ட உங்களால் முடியுமா?
பொழுதுபட்டாலே பூட்டிய கதவுக்குள்
பல்லிகளாய் முடங்கி
பாம்புகளாய் நெடுமூச்செறிந்து
தேர்தல் முடிவுகள் போல்
வானொலிச் செய்திக்காய்க் காத்திருந்து
வாழ்வதுவும் ஒரு வாழ்வா.
ச்சீ.... என்றது பேய்.
அயர்ந்து போனேன்.
அப்பாவிப் பொதுமக்கள்
இப்பூமி பிறந்து விட்டோம்
யுத்த வடு ஆறுமுன்னே
சுனாமியலை ஆர்ப்பரிக்க அகதியானோம்
என்ன செய்ய விதி செய்த சதியென்றேன்
என்னடாப்பா பேசுகின்றாய்
உன்னிலும் நாலுபங்கு
ஓ எல்லும் தாண்டாத
பெடிபெட்டை உழைக்குதுகள்
மேசனுக்கு ஆயிரம். கூலிக்கு ஐநூறு
வேனுக்கு வாடகை. மோட்ட
சைக்கில் எரிபொருள்
நாள்கணக்கில் உழைக்குதுகள்
நீயெங்க சீவிக்கின்றாய்.
அப்பனே புள்ளையாரே
அடுத்துமொரு சுனாமியைத் தா
சாராயச் செல்லன் சத்தமாய்க் கேக்கிறான்
சொல்லிய பேயும் மெல்ல உறங்கவே
நழுவிய பேப்பரை
நானெடுத்து நடக்கின்றேன்

கவிஞர்
பைந்தமிழ்க்குமரன் தாவீது
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

**ஆழியோன்**

## சிந்திக்கவைக்கும் நகைச்சுவைத் துணுக்குகள்

அண்மையில் வெளிவந்த "சண்டே ஒப்சேவர்" பத்திரிகையின் நகைச்சுவைப் பகுதியில் ஜோர்ஜ் புஷ் மீண்டும் இழுக்கப்பட்டுள்ளார்.

ஓர் இளைஞன் மரணித்து மோட்சத்திற்குப் போகின்றான். அங்கு அவனைப் புனித பீற்றர் வரவேற்கின்றார். ஏராளமான மணிக்கூடுகள் போன்ற அமைப்புக்கள் சுவர்கள் எங்கும் கொழுவிக் காணப்படுகின்றன. "இவைகள் எல்லாம் என்ன?" என்று அவ்விளைஞன் புனித பீற்றரிடம் கேட்டான்.

"இவைகள் எல்லாம் பொய்களைக் காட்டும் கருவிகள். பூமியில் இருந்த, இருக்கின்ற ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு கருவிகள் இங்கே உண்டு. இதோ பார் மகனே! இக்கருவியின் முள் பூச்சியத்தை காட்டிக்கொண்டு இருக்கின்றது. இது அன்னை தெரேசாவிற்கானது. அவர் ஒருபோதும் பொய் சொன்ன தில்லை" என்றார் புனித பீற்றர்.

இன்னொரு கருவி இரண்டு என்னும் இலக்கத்தைக் காட்டிக்கொண்டிருந்தது. "இது யாருடையது?" என்று இளைஞன் கேட்டான்.

"இது ஆபிரகாம் லிங்கனுடையது. அவர் இரண்டு பொய்கள் சொல்லியுள்ளார்" என்றார் புனித பீற்றர்.

திடீரென இளைஞன் ஏதோ ஒன்றைத் தேடத் தொடங்கினான்.

புனித பீற்றர் கேட்டார் "யாருடைய கருவியைத் தேடுகிறாய் மகனே?"

இளைஞன் சொன்னான் "ஜோர்ஜ் புஷ்ஷின் கருவியைத் தேடுகின்றேன்..."

புனித பீற்றர் அமைதியாகச் சொன்னார். "மகனே, அது இங்கேயில்லை, அதை இயேசு தன் அறையில் மின்விசிறிக்குப் பதிலாகப் பயன்படுத்துகின்றார்"

உண்மையில் இவ்வாறான நகைச்சுவைத் துணுக்குகளை இயற்றுபவர்களுக்கு அபாரமான அறிவு இருக்க வேண்டும். சிரிக்கவும் வைக்க வேண்டும்: சிந்திக்கவும் வைக்கவேண்டும்.

இவ்வாறான நகைச்சுவையைக் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் தனது திரைப் படங்களில் காட்டியுள்ளார் என்பதை நாம் அறிவோம். தற்போதைய திரைப்படங்களில் அப்பணியை திரு விவேக் அவர்கள் செய்து வருகின்றார். அதனால் தான் அவரைச் சின்னக் கலைவாணர் என்றும் அழைக்கின்றார்கள்.

நகைச்சுவைத் துணுக்குகள் சிரிப்பை ஊட்டுவதற்கு மட்டுமல்ல, கேட்பவர்களின் விவேகத்தை மட்டிடவும் பயன்படுகின்றன. நகைச்சுவைத் துணுக்குகளைக் கேட்டவுடன் சிலர் உடனே சிரித்து விடுவார்கள். சிலர் சற்றுத் தாமதமாகச் சிரிப்பார்கள். சிலர் சிரிக்கவே மாட்டார்கள். நல்ல விவேகம் உள்ளவர்கள்தான் உடன் சிரிப்பார்கள். ஆரம்பத்தில் உள்ள துணுக்கை வாசிப்பவர்களில் நல்ல விவேகம் உள்ளவர்கள்தான், ஜோர்ஜ் புஷ் அவர்கள் ஏராளமான பொய்களை அடுக்கடுக்காக சொல்பவர் என்பதனை சடுதியாக விளங்கிக்கொள்வர்.

தென்னிந்தியாவில் 'நகைச்சுவைக் கழகங்கள்' ஏராளமாகக் காணப்படுவதாக அறிகின்றோம். அவர்கள் காலத்திற்குக் காலம் ஒன்றுகூடி 'ஜோக்"குகளைச் சொல்லி, பகிர்ந்து சிரிக்கவும் வைப்பார்கள், சிந்திக்கவும் வைப்பார்கள். இலங்கையில் அவ்வாறான அமைப்புக்கள் இருப்பதாக தகவல்கள் இல்லை. அவ்வாறான அமைப்புகளை ஆரம்பித்துப் பாருங்கள்.

இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்கள் தான் நகைச்சுவையைத் தரும் என்று சிலர் நினைக்கின்றார்கள். பெரும்பாலும் அவற்றில் ஆபாசம்தான் மிஞ்சும்.


சில திரைப்படங்களில் வரும் நகைச்சுவைக் காட்சிகள் நினைக்க, நினைக்கச் சிரிப்பைத் தரும். ஒரு திரைப்படத்தில் (பெயர் ஞாபகம் இல்லை) விவேக் மின்சாரத்தால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருப்பார். மின்சாரத்துறை ஊழியர் அவரிடம் 30 அலகுகள் மின்சாரம் பாய்ந்துள்ளதாகக் கூறி 'பில்லை'க் கொடுக்கின்றார். உண்மையில் சிரிக்கவைக்கும் காட்சி.

இன்னொரு திரைப்படத்தில் கதாநாயகனின் பெயர் 'மும்பை எக்ஸ்பிரஸ்'. இவர் பயணம் செய்யும் 'மோட்டார் சைக்கிள்', ஸ்டார்ட் வராமல் அவதிப் படுகின்றார். அதேவேளை 'மும்பை எக்ஸ்பிரஸ்' புகைவண்டியும் இடைவெளியில் நிறுத்தப்பட்டுள்ளது. புகை வண்டியை உடன் அனுப்பும்படி பொலிஸ் உயர் அதிகாரி வயர்லெஸ்ஸில் உத்தரவிடுகின்றார். செய்தியைக் கருவியில் கேட்ட இன்னொரு அதிகாரி கதாநாயகன் 'மும்பை எக்ஸ்பிரசின் மோட்டார் சைக்கிளைத் தள்ளி 'ஸ்டார்ட்' செய்து அனுப்பிவிடுகின்றார். 'மும்பை எக்ஸ்பிரசை' தள்ளி ஸ்டார்ட் செய்து அனுப்பி விட்டதாக மேலதிகாரிக்குச் செய்தி அனுப்ப, அவர் புகைவண்டியை எப்படித் தள்ளி 'ஸ்டார்ட்' செய்வது என்று குழம்புகின்றார்.

இவ்வாறான சில காட்சிகள் சிரிக்க வைக்கின்றன: வேறு சிலவோ அருவருப்பைத் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாபேல் கோபுரம்

பெரு வெள்ளத்திற்குப் பின் வரும் வம்ச வரிசைகள் ஆபிரகாமைக் கண்முன் வைத்து அமைக்கப்பட்டவையாகும். ஆபிரகாம் தோன்றிய பின்னணியைக் காட்டும் முன்னுரையாகவும் இது உள்ளது. நோவாவின் மக்கள் மூவரின் வம்ச வழியினைக் கூறி ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்த மூன்றுவித மக்களையும் குறிப்பிடுகின்றார். ஆபிரகாமின் முன்னோர் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் எனவும் தங்களைச் சுற்றி வாழ்ந்த கனானேயர், பிலிஸ்தியர் தமது பகைவர் என்பதனையும் காட்ட அவர்கள் முன்னோர்களான காமு அல்லது கானான் போன்றவர்களைப் படைத்து அவர்கள் பாவிகள் என்பதையும் காட்டுகின்றார்.



எனவே, பாபேல் கோபுரக் கதையும் மொசப்பத்தேமியாவில் இருந்து வந்தது என்பதில் சந்தேகமேயில்லை. இதுபோன்ற பல சட்டங்களைப் புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்ந்தெடுத்துள்ளார்கள். இது பலர் சேர்ந்து இறைவனுக்குக் கட்டும் கோயிலாகும். ஒரே இடத்திலே வாழ்ந்த மக்கள் இட நெருக்கடியால் பிரிந்தும் சென்றனர். அவர்களில் ஓர் இனமே ஆபிரகாமின் முன்னோர் ஆவர். இவ்வினம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் ஆகும். இதனை விளக்கவே பாபேல் கோபுரக் கதை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பெருவெள்ளத்தின் பின்பும் மக்கள் பாவ வழ்வினை விட்டு விலகாமல் கடவுளுக்கு எதிராகக் கலகம் செய்து, தான் என்ற தலைக்கனம் பிடித்துத் திரிந்தார்கள். தாம் சிதறுண்டு போகாத வண்ணம் வானளாவிய ஒரு கோபுரம் கட்டி தமது பெயரையே மேன்மைப் படுத்த விரும்பினர். இச்செயலினை இறைவன் விரும்பவில்லை. அவர்களுடைய இச்செயலை வெறுத்த இறைவன் அவர்களிடையே மொழிக் குழப்பத்தை ஏற்படுத்தி அவர்கள் பேசும் மொழிகளையே விளங்காமற் பண்ணினார். அவர்களை அங்கிருந்து உலகம் முழுவதிலும் சிதறுண்டு போகச் செய்தார். இவ்வாறு செய்ததால் அவர்கள் அதைக் கட்டுவதைக் கைவிட்டனர். இதுவே பாபேல் என அழைக்கப்பட்டது.

இதன் மூலம் இறைவனுக்கு எதிராகச் செய்யும் எந்தச் செயலும் பயனளிக்காது என்பது வலியுறுத்தப்படுகின்றது. பழங்காலத்தில் ஓர் இன மக்கள் பல மொழிகள் பேசியது, விளங்காமற் போனது. இது எங்ஙனம் உருவாகியது என்பதை விளக்கவே இக்கதை எழுந்தது. இதனைப் பயன்படுத்தி ஆசிரியர் இறைவனை எதிர் கொள்ளவும் எதிர்க்கவும் கூடியவர் யாருமில்லை என்பதனை வலியுறுத்துகின்றார். எத்தனை நாட்டு மக்கள் ஒன்றுகூடி எழுந்தாலும் இறைவன் ஒரு நொடியில் அனைத்தையும் அழித்து விடுவார் எனும் உண்மையை விளக்குகின்றார்.

எனவே, 1-11 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள மெய்மறை உண்மைகள் சிலவே.

இறைவன் ஒருவர் என்ற உண்மையும், வார்த்தையாலே அனைத்தையும் படைத்தார் என்பதனையும், மனிதன் பாவம் செய்யும்முன் வாழ்ந்த பரிசுத்த நிலையினையும், பாவத்தின் பின்பு அவனது பரிதாப நிலையினையும், பாவத்தினைப் பகைத்து, வெறுத்து பாவியைத் தண்டிக்கும் இறைவன், இரக்கம் உடையவர் என்றும், நல்லவர்களை எப்போதுமே அவர் காப்பாற்றுகிறார் என்ற பெரிய உண்மையையும் வலியுறுத்தியுள்ளார். மனிதனை மீட்க வரவிருக்கும் மீட்பர் ஆபிரகாம் இனத்திலிருந்தே தோன்றுவார் என்ற உண்மையை விளக்க ஆபிரகாமை அறிமுகப்படுத்தும் நோக்குடன் முதல் 11 அதிகாரங்களும் எழுதப்பட்டவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்....

ஜூன் மாதத் தொண்டன் இதழில் வெளிவந்த இலக்கிய மஞ்சரியில் இடம்பெற்ற 'தமிழர் உற்பத்தி' எனும் விடயம் தொடர்பாக தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார் வாகரைவாணன். ஆய்வுக்குரிய விடயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது இயல்புதான். வரவேற்கிறோம்: வாசகர் பார்வைக்கு முன்வைக்கிறோம்.

"தமிழர் உற்பத்தி" (தொண்டன், யூன்) எனும் தலைப்பில் ஆழியோன் தெரிவித்துள்ள கருத்துக்களும், மேற்கோள்களும் ஆழ்ந்த அவதானத்துக்குரியவை என்பதனால் அவர் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள சிவனொளிபாத மலையின் பக்கம் முதலில் நமது கவனத்தைத் திருப்புவோம்.

உலகின் தொன்மை மிகு வழிபாடுகளில் அக்கினி, சூரியன் வணக்கமும் ஒன்று. ஆரியர்களின் வேதங்களில் இத் தெய்வங்களுக்கு (அக்கினி, சூரியன்) அளிக்கப்பட்டுள்ள முக்கியத் துவமே இதனைக் காட்டும். மேலும், பாண்டவர் களின் தாய் குந்திதேவியின் மூத்த மைந்தன் கர்ணன், பகலவன் அருளால் பிறந்தவன் என்னும் மகாபாரதக் கதையும் மேற்படி வழிபாட்டோடு தொடர்புடையதாகவே கொள்ளப்பட வேண்டும்.

இது தவிர, இந்துக்களின் பிரமன், விஷ்ணு, சிவன் (உருத்திரன்) என்னும் திரித்துவக் கடவுள்களின் பெயர்கள் குறிக்கும் அர்த்தங்களும் சூரியன் அல்லது ஒளி வழிபாட்டையே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

இந்த மூன்று தெய்வங்களில் ஒன்றான பிரமன் என்னும் பெயருக்கு படைத்தல் கடவுள் என்று மட்டுமன்றி ஆதவன் என்றும் அர்த்தம் உண்டு. விஷ்ணு எனும் சொல் 'விண்' எனும் சொல்லின் திரிபு என்பார் அறிஞர் தென்புலோலியூர் கணபதிப்பிள்ளை அவர்கள். இதன்படி விண் எனும் சொல் ஒளி எனும் பொருளையே தருகின்றது. இதுபோன்றே சிவன் எனும் சொல் சிவந்தவன் எனும் சொல்லின் சிதைந்த வடிவம் என்பார் அறிஞர் ந.சி. கந்தையாப்பிள்ளை அவர்கள். சிவந்தவன் எனும் பெயர் செங்கதிரோனையே சுட்டும்.

முருகனைக் குறிக்கும் சேயோன் எனும் சொல்லுக்கு சூரிய என்றும் பொருள் உண்டு. இச் சொல்லில் (சேயோன்) இருந்தே சிவம் எனும் சொல் பிறந்ததென்பார் மறைமலை அடிகள். சிவனைக் குறிக்கும் இன்னுமொரு பெயர் உருத்திரன். இப் பெயருக்குரிய தெய்வம் இருக்கு வேதத்தில் தீ என்றே விளிக்கப்படுவதாக அடிகளார் எடுத்து ரைப்பார்.

உரோமர்களின் சூரியக் கடவுளின் பெயர் யூபிற்றர். *(Jupiter)* இக் கடவுள் ஒலிம்பஸ் *(Olympus)* என்னும் மலையில் அமர்ந்து ஆட்சி செய்வதாக ஐதீகம். (இவ்வைதீகம் இந்துக்களின் வணக்கத்திற்குரிய கைலயங்கிரியையும் அதில் அமர்ந்தருள்பாலிப்பதாக நம்பப்படும் சிவபெரு மானையும் ஞாபகப்படுத்தலாம்).

உரோமர்களைப் போன்றே கிரேக்கர்களும் சீயஸ் *(ZEUS)* எனும் பெயர் கொண்ட சூரியக் கடவுளை வழிபடுபவர்கள். இக் கடவுள் அவர்க ளைப் பொறுத்தவரையில் மனுக்குலத்தின் தந்தையாகவே மதிக்கப்படுவர்.

யூத மக்களின் வாழ்க்கையிலும் மலையும் சூரியனும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. சீனாய் மலையில் நெருப்பின் இடையே பிதாவாகிய சர்வேசுரன் மோயீசனுக்குக் காட்சி அளித்தமையை பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம். பின்பு இயேசுக்கிறிஸ்து தம்மை 'உலகின் ஒளியாகவே உருவகப்படுத்துவதைப் புதிய ஏற்பாட்டில் காண்கி ன்றோம். இதன் ஓர் அங்கமான 'திருத்தூதர் பணி'யில் திரித்துவத்தில் ஒருவரான தூய ஆவியானவர் யேசுவின் சீடர்கள் மீது அக்கினி நாக்கு வடிவில் இறங்குவதையும் தரிசிக்கின்றோம்.

இவ்விதம் பிதா, சுதன் (கிறிஸ்து), தூய ஆவி ஆகிய மூவரும் ஒளியாகவே தோற்றம் தருகின்றனர். இயேசுக்கிறிஸ்து ஒளி வடிவானவர் எனும் கருத்தை நிலை நிறுத்தும் வகையில் அக் காலத்தில், சூரியனுக்கு விழாவெடுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளினையே (டிசம்பர் 25) இயேசு பிறந்த நாளாகவும் திருச்சபையால் தெரிவு செய்யப்பட்டமையை நாம் இச் சந்தர்ப்பத்தில் எண்ணிப்பார்த்தல் ஏற்றதாகும்.

மலைகளும் குன்றுகளும் தமிழருக்கு மகிழ்ச்சியைத் தருபவை. ஆழ்வார்களில் ஒருவர் திருமாலை, 'பச்சைமாமலை போல் மேனி' என்று வர்ணித்து அகம் குளிர்ந்தமை இந்த ஈடுபாட்டினால் தான். அழகுத் தெய்வம் முருகன் மலையின் மீதே அரியாசனம் போட்டு அமர்ந்திருக்கின்றான். சங்க இலக்கியங்களில் இந்தக் காட்சி சாகாவரம் பெற்றது.

முருகு எனும் சொல்லுக்கு அழகு, இளமை என்னும் பொருள் உண்டு. எனினும் அழகு ஒளிமயமானது என்பதனை நமது அனுபவம் சொல்லும். இயற்கையோடு ஒன்றி வளர்ந்த பழந் தமிழருக்கு இந்த அனுபவம் எப்போதும் இருந்தது.

பழந்தமிழரின் இந்த ஒளி வழிபாட்டின் தெளிவானதோர் அடையாளமாகவே சிவனொளி பாத மலையை நோக்க வேண்டும். அதாவது, சிவந்தவனாகிய முருகனின் ஒளியை (அழகைக்) கண்டு தமிழர் வணங்கிய திருத்தலமே சிவனொளி பாதமலை என்று கொள்வதே சரியானதும் பொருத்தமானதுமாகும்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளாகிய தமிழர்கள் அன்று நாகர், இயக்கர் என்றே அழைக்கப்பட்டனர். முருக வழிபாடும் கொற்றவை (காளி அல்ல) வழிபாடுமே அன்றையத் தமிழரின் தேசிய வழிபாடுகளாக விளங்கின. சங்க இலக்கியங்களே இதற்குச் சான்று. முருக வழிபாட்டிலிருந்தே சிவ வழிபாடு முகிழ்த்தது என்பார் தமிழ் அறிஞர் பண்டிதர் வீ. சி. கந்தையா அவர்கள்.

குமரன் (முருகன்) குறிஞ்சி நிலத் தெய்வம். குன்றுகளும் மலைகளும் குறிஞ்சி நிலத்திற்குரியன. எனவே, தமிழகத்தின் திருப் பரங்குன்றம், பழனி மலை போல சிவனொளிபாத மலையும் முருக வணக்கத்திற்கே உரியது என்று கொள்ளுவதே தர்க்க ரீதியானதுமாகும். மற்றப்படி இதனை ஆதம்மலை என்றோ, புத்தரின் பாதம் பதிந்த மலை என்றோ பேசுவதும் எழுதுவதும் மத சார்பான சிந்தனையின் விளைவன்றி வேறு அல்ல.

தமிழர் இயற்கை வழிபாட்டோடு தொடர்பு டைய சிவனொளிபாத மலையை ஆழியோன் ஆதம் மலையாகக் காண்பதற்கு, ஆதி மனிதனாகிய ஆதம் இலங்கையில் பிறந்திருக்கக்கூடும் என்னும் அறிஞர் சிலரின் கருத்துக்களே அடிப்படையாக இருக்க வேண்டும். ஆகவே , அக் கருத்துக்களின் பக்கம் நமது சிந்தனையைத் திருப்புதல் அவசிய மாகின்றது.

இன்றைய ஈழத்தை (இலங்கையை) உள்ளடக்கிய குமரிக் கண்டம் (லெமூரியா) என்னும் பெருநிலப்பரப்பு இந்தியாவின் தென்கோடியில் இருந்ததாகவும், அது பின்பு கடல்வாய்ப்பட்டு அழிந்து விட்டதாகவும் நிலநூல் வல்லார் கூறுவர். இதனை கி.பி. 2ம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரம் 'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள' என்று விவரிக்கும்.

இப் பெருநிலப்பரப்பின் பழமையைக் கருத்திற் கொண்ட ஆய்வறிஞர்கள் (ஐரோப்பியர் உட்பட) பல்வேறு காரணிகளை முன்வைத்து ஆதி மனிதனாகிய ஆதம் இந்த மண்ணில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந் தனர். ஆனால் இன்று இந்தக் கருத்து வலுவிழந்து விட்ட நிலையில் ஆதிமனிதனின் பூர்வீகம் ஆபிரிக் காக் கண்டமே என்னும் கருத்தே சமீபகாலமாக மேலோங்கி நிற்கிறது என்பதனை ஆழியோன் அறிந்து கொள்ளாதது ஆச்சரியத்தைத் தருகின்றது.

பல்வேறு சமயச் சிந்தனைகள், - தத்துவங்கள், கிரியைகள்-என்பவற்றுக்கிடையே காணப்படும் சில ஒற்றுமைகள் கண்டு யாரும் வியப்பதற்கேதுமில்லை. ஏனெனில் அவை இயல்பானவை. இதற்கான ஒரே ஒரு காரணம் மனிதமனம் அடிப்படையில் ஒன்று' என்பதுதான்.

ஆணும் பெண்ணும் இணைந்துதான் உண்மையான, முழுமையான வாழ்க்கை எனும் கருத்தையே ஆதாமின் எலும்பில் இருந்து ஏவாள் உருவாக்கப்பட்டாள் என்னும் பைபிள் கதையும், அர்த்தநாரீஸ்வரர் (உமையொருபாகன்) என்னும் இந்து தத்துவக் கோட்பாடும் எடுத்தியம்புகின்றன. இக் காரணம் பற்றியே இந்து மதம் துறவறத்தை வலியுறுத்துவதில்லை. முற்றும் துறந்த முனிவர்கள் கூட தர்மபத்தினியோடு தப வாழ்க்கையில் ஈடுபட்டதாக நாம் அறிகின்றோம். துறவறமும் ஒரு வாழ்க்கையாக அறிமுகப்படுத்தப்பட்டது, சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களின் தோற்றத்திற்குப் பிறகுதான் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு வணக்கமும் மிகவும் பழமையானது. இயற்கையைக் (காற்று, மழை, இடி) கண்டு அஞ்சிய ஆதிமனிதன் அவற்றைத் தெய்வமாக்கியது போலவே பாம்பையும் அவன் வணங்கலானான். பாம்பு அக்காலத்தில் தீமையின் குறியீடாகவும் கொள்ளப்பட்டது. இதற்கு ஏவாள் ஏமாற்றப்பட்ட கதை ஒரு நல்ல உதாரணம்.

இறுதியாக –

பண்டைய மனித இன வரலாறு – அது தொடர்பான கதைகள் சமயத் தத்துவங்கள் கோட்பாடுகள் என்பவற்றைக் கற்கும் நாம் அவற்றில் காணப்படும் ஒரே மாதிரியான சம்பவங்களை, சிந்தனைகளை நமது விருப்பு வெறுப்புக்கேற்ப விளங்கிக் கொள்ளமுற்படுதல் அல்லது விளக்குதல் ஆரோக்கியமான ஆய்விற்கு இட்டுச் செல்லாது என்பதை அத்துறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் மிகவும் விரும்பத்தக்கதாகும்.

– யாகரையாணன் –

---




இறைவா!
நீர் என்ன
இலங்கையரா?
என்னதான் பின்னே...
நீரால் இனி
நிர்மூலம் இல்லையென
வானவில் ஒப்பந்தத்தில்
வாகாய்
கைச்சாத்திட்டுவிட்டு,
அடிக்கடி
அத்துமீறுகின்றீரே.
சீனாவில்
மழைவெள்ளம்...

இந்தியாவில்
நதிப்பெருக்கு...
அனைத்துக்கும் சிகரமாய்
சுனாமி எனவும்....
இப்போதும்
வதந்தியாய் வந்துபோகும்
அது.
பூமியின்
தெய்வ நிந்தனைக்கு
தேவைதான் எனத் தோன்றிடினும்
தேவா
இது பெரிது.

கடலைத் தரையென
நடந்து கடந்த,
பேதுரு கூட
பெரிதாய் இடிந்திருப்பார்
இதற்கு
நாங்கள் எம்மாத்திரம்?

ஆண்டவரே
அதனால்தான் கேட்கிறேன்.
மீண்டும் அனுப்பும்
சிந்தனையிருந்தால்,
சற்று சிந்தித்துக் கைவிடும்
பாவத்தில் முற்றியவர்களை
விட்டுவிட்டு
சிசுக்களை அள்ளிச்செல்லும்
அந்தக் கடலலையின் ஊர்வலத்தை

A. அமல்ராஜ், முத்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி கலைக்காவேரி நுண்கலைக்கல்லூரி முதல்வர்

# அருட்செல்வி. மார்கிறட் பாஸ்டின் (FSJ)



## அவர்களுடன் ஒரு நேர்காணல்

கத்தோலிக்கத் திருச் சபையானது சமயப் பணியுடன் வெவ்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றிவருவது என்பது காலங்காலமாக நடைபெற்று வருகின்றவொன்று. துயர் துடைக்கும் பணி, கல்விப் பணி, மருத்துவப்பணி, இலக்கியப்பணி என்று இப்பட்டியல் நீண்டு கொண்டு செல்கின்றது. இவ்வகையில் இசைத்துறையில் கல்விப்பணி புரிந்து வரும் அருட்சகோதரி மார்கிறட் பாஸ்டின் FSJ அவர்களை தொண்டனுக்காகச் செவ்விகண்டோம். திருச்சி கலைக்காவேரி, நுண்கலைக் கல்லூரியின் (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது) முதல்வராகப் பணியாற்றும் அருட்சகோதரி அவர்கள், கிழக்குப்பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரையை ஆற்ற மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தார்கள். கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசாரப் பீடாதிபதி பாலசுகுமார் அவர்களின் இல்லத்தில் இந்நேர்காணல் இடம்பெற்றது.

**வணக்கம் அருட்சகோதரி அவர்களே! முதலில் சிறு கேள்வியொன்று. உங்களின் பெயரின் பின்னால் வரும் FSJ என்பது எதனைக் குறிப்பிடுகின்றது?**

புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபை என்பது அதன் பொருள். இச்சபையானது ஜெர்மனியிலும் இந்தியாவிலும் காணப்படுகின்றது. குறிப்பாக வடஇந்தியாவில் ஏராளமாக இச்சபை பரந்துள்ளது.

**உங்களைப் பற்றியும், துறவற வாழ்க்கைக்கு உங்களை ஈர்க்கக் காரணமாய் இருந்த காரணிகளைப் பற்றியும் கூறுங்களேன்.**

நான் திருச்சியில்தான் பிறந்தேன். சென்னையில் வளர்ந்தேன். பெற்றோர்கள் கோயம்புத்தூரில் உள்ளார்கள். எனது தகப்பனாரின் சகோதரிகள் இருவர் அருட்சகோதரியாக உள்ளார்கள். அதனால் தான் எனக்கும் துறவற வாழ்க்கையில் ஈடுபாடு ஏற்பட்டது. எஸ். எஸ். எல். சி. சித்தியடைந்தபின் அருட்சகோதரியானேன். +2ல் மனையியல் கற்றேன். பின்னர் ராணி மேரிக்கல்லூரியில் இசைத்துறையில் இளமானிப் பட்டம் பெற்றேன். பின்னர் இசைத் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றுக்கொண்டேன். தென்னிந்தியாவிலேயே இசைத்துறையில் பி.எச்.டி. பட்டம் பெற்ற முதலாவது ஆள் நான்தான். (இதை மிகவும் அடக்கமாகச் சொன்னார்).

**(தயக்கத்துடன்....) உங்கள் வயது என்ன வென்று அறியலாமா?**

(சிரிப்புடன்) நாற்பத்திஏழு.

**உங்கள் கல்விப்பணிகள் பற்றி கூறுங்களேன்.**

சென்னை, அரசு இசைக்கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றினேன். பின்னர் இரண்டு வருடங்கள் ராணி மேரிக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினேன். தொடர்ந்து கொடைக்கானல் அன்னை திரேசாப் பல்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் இசைத்துறைத் தலைவராகப் பணியாற்றினேன். கடந்த மூன்று ஆண்டுகளாக திருச்சி கலைக்காவேரியின் முதல்வராகக் கடமை புரிந்து வருகின்றேன். இதன் ஸ்தாபகர் அருட்பணி. எஸ். எம். ஜோர்ஜ் அவர்கள். இங்கு முதன் முறையாக நடனத் துறைக்கும் பட்டம் வழங்கப்படுகின்றது.

**உங்களின் இலங்கை விஜயம் பற்றிச் சொல்லுங்களேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப் பட்ட சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரையை ஆற்ற அழைக்கப்பட்டேன். 'விபுலானந்தர் தம் யாழ்' என்னும் தலைப்பில் உரையாற்றினேன்.

**சுவாமி விபுலானந்தர் பற்றிய ஈடுபாடு எப்படி ஏற்பட்டது?**

எனது எம்.பில் (MPhil) ஆராய்ச்சிக்காக சிலப்பதிகார இசைக்குறிப்புக்களை தலைப்பாகத் தெரிந்தெடுத்திருந்தேன். பி. எச்.டி (Phd) பட்ட ஆராய்ச்சியை விபுலானந்த அடிகளாரின் 'யாழ்நூல்' தொடர்பாகச் செய்தேன். சிலப்பதிகார இசைக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டே சுவாமி விபுலானந்தர் அடிகளார் யாழ்நூலை எழுதியிருந்தார்.

**கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேறு ஏதும் பணிகள் ஆற்றவுள்ளீர்களா?**

ஆம்! கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இசைத் துறை, நடனத்துறை என்பனவற்றில் முதுமானிக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். 'இன்னிசைச் சிலம்பு' என்னும் தலைப்பில் இசைநடனக் கல்லூரியின் விரிவுரையாளர்கட்கு விரிவுரையாற்றினேன்.

**'யாழ்' என்ற இசைக்கருவி தற்போது உண்டா?**

'யாழ்' என்ற இசைக்கருவி தற்போது புழக்கத்தில் இல்லை. பத்துப்பாட்டில் வருகின்ற 'பெரும் பாணாற்றுப் படையில்' குமிழ மரத்தில் செய்யப்பட்ட 'வில் யாழ்' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பஞ்ச மரபு' நூலில் 'பேரி யாழ்', 'மகரயாழ்', 'சகோடயாழ்', 'செங்கோட்டு யாழ்', என்பனபற்றிக் கூறப்பட்டுள்ளது. கல்லாடத்தில் 'மருத்து யாழ்', 'துன்புறுயாழ்', 'கீச்சக யாழ்' என்பன பற்றி சொல்லப் பட்டுள்ளது. சீவக சிந்தாமணியின் அடிப்படையில், 'யவனர்' வழியாக 'மகரயாழ்' வந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. இவற்றையெல்லாம் அடிப் படையாகக் கொண்டு எனது கலாநிதிப் பட்ட ஆராய்ச்சிக்காக 'யாழ்' ஒன்றைத் தயாரித்திருந்தேன். அது தற்போது ஜேர்மனியில் உள்ளது. இசைப்பாடத் திட்டத்தில் Physics of Music என்ற பகுதியில் 'இசைநரம்பியல்' என்ற பிரிவு உண்டு. இதுவும் எனக்கு உதவியது.

**உங்கள் இசைக்கல்விப்பணி காரணமாக ஆன்மீகப் பணியில் பாதிப்பு உண்டா?**

இல்லை, இசைக்கு இன, மத, மொழி வேறு பாடில்லை. கண்ணா என்று பாடியே ஜெபிக்கலாம். கல்விப்பணியே ஒரு ஆன்மீகப் பணிதான்.

**இசைத்துறையின் மூலம் நீங்கள் ஆற்றியுள்ள கிறிஸ்தவத் தொண்டுகள் என்ன?**

நிறையப் பாடியுள்ளேன். அவை ஒலி நாடாக்களாக வெளிவந்துள்ளன. பாடல்கள் மூலம் ஜெபிப்பது மிகவும் சிறப்பானது

**இசைத்துறையின் மூலம் நீங்கள் ஆற்றியுள்ள சாதனைகள் என்ன?**

எதையுமே சாதிக்கவில்லை. இசைப்பற்றி இன்னமும் கற்கவேண்டும். ஜே. வெங்கட்ராமன் என்னும் எழுபது வயது இசைமேதையிடம் இப்போதும் இசையைக் கற்றுக்கொண்டிருக் கின்றேன். இவர் பணத்திற்காக இசையை கற்பிப்பவர் அல்ல.

**இலங்கையைப் பற்றியும், அதன் மக்களைப் பற்றியும் ஏதும் சொல்ல விரும்புகின்றீர்களா?**

நான் எதனை விரும்பினாலும் இறைவன் அதனை எனக்குத் தருவது வழக்கம். பறவைகளைப் பார்க்கும்போது விமானத்தில் பறக்கவேண்டும் என்ற ஆசை வரும். ஜேர்மன் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. சுவாமி விபுலானந்தரின் நாட்டைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. முதன் முறையாக வந்துள்ளேன். அருமையான மக்கள். எனது கல்லூரியில் 25 இலங்கை மாணவர் உள்ளனர். இங்கு இல்லாததை அங்கு பெற வந்துள்ளார்கள். அதை இங்கேயே பெற வழி சமைக்கவேண்டும். இங்குள்ள மக்கள் என்னை அன்போடு நடத்துகின்றார்கள். உண்மையில் மட்டக் களப்பு மக்கள் விருந்தோம்பலில் சிறப்பானவர்கள்.

இலங்கை வந்தபின்னர் இங்குள்ள மக்க ளின் சுனாமி, யுத்த அவலங்கள் பற்றி அறியும்போது இதயம் கலங்குகின்றது.

இறுதியில் 'தொண்டன்' சார்பில் நன்றி கூறி விடைபெற்றோம்.



- R.B. வாஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகம், சமூகம், பண்பாடு -ஒரு சமூக, மானுடவியல் பார்வை-

**சந்திரசேகரன் சசிதரன்** (சமூகவியல்-விசேடம்)

அறிமுகம்:-


இன்று, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நூற்றாண்டினை 'தகவல் மைய நூற்றாண்டு' என்று அழைக்கின்றனர். அத்துணை அளவுக்குத் தகவல்களும், அவற்றைப் பரப்பும் சாதனங்களும் வாழ்வியலோடு சங்கமம் ஆகி, அத்தகு தொடர்பு சாதனங்களால் ஆளப்படுகின்ற உலகில்தான் நாம் வாழப் பணிக்கப்பட்டிருக்கின்றோம். புதிதாய் இக்கணத்தில் ஜனித்த புத்தம் புதிய சிசு கூட இன்றைய ஊடகங்களின் ஆதிக்க சக்திக்கு தன்னை உட்படுத்தும் கால கட்டம் இது. மனுக்குல வரலாற்றில், அகண்டிதமான பரிணாமவளர்ச்சியினை எய்தி நிற்கும் வெகுசன ஊடகங்கள் உருவாகி வளர்ந்தமை பற்றியும் ஒரு வரலாறு உண்டு. அது, நீண்டது, பல்பக்கம் சார்ந்தது: விஞ்ஞான, தொழிநுட்பக் குணாம்சம் மிக்கது. நாம் அதனை விடுத்து, ஊடகங்கள், சமூகத்தையும், பண்பாட்டையும் பாதிக்கின்ற பாங்கினையும் இன்றைய ஊடகங்களின் செல்நெறிப்போக்கின் திசைகோளையும் சிந்திக்க வேண்டிய சாதகமான/ சாத்தியமான மாற்றங்களையும் மையப்படுத்திச் சுருக்கமாக ஆராய்வோம்.

**தொடர்பாடல் முயற்சிகளும், சமூக மாற்றமும்:-**

மனிதன் ஒரு 'சமூக விலங்கு' (Social Animal) என்கிற ரீதியில், அவன், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே 'தொடர்பாடல்' நோக்கிய பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்துள்ளமை நிரூபணமான விடயமாகின்றது. இன்று நாம் வியந்து போற்றும் 'குகை ஓவியங்களும்' கலை நிறைந்த சிற்பங்களும், புராதன தொல்பொருட் சின்னங்களும் கூட பண்டைக்கால மனிதனின் தொடர்பாடலுக்கான வழிமுறைகளின் அம்சங்களே. காசிநகர்ப் புலவர் காஞ்சியிற் பேசும் பேச்சினைக் கேட்டிட ஒரு கருவி செய்ய விழைந்த கவி பாரதி, இன்றைய கணினி யுகத்தில் வாழ்ந்திருப்பின் வேறு விதமாகப் பாடி இருக்கலாம். ஒலியும், ஒளியும், வர்ணக் கொடிகளும், கூக்குரலும், சித்திரமும், புறாவின் கால்களும், ஓலையும், ஓட்ட வீரரும், பின்னர் அஞ்சல் முறைமையுமாய் ஒரு வகையான வளர்ச்சிப் படிமுறைகளை நாம் தொடர்புசாதனங்களின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றோடு இணைத்துப் பார்க்கலாம்.

தொடர்பாடலின் வியாபகம், விஸ்வரூபம், உலகமயமாக்கம் என்பவை, மனித சமூகங்களையும், சமூக நம்பிக்கைகள் (beliefs), விழுமியங்கள் (Vallues), நியமங்கள் (Norms), மரபு வழக்காறுகள் (Conventions / Sentiments), கருத்தியல்கள் (Ideologies), பண்பாட்டு வடிவங்கள் (Cultural Form) ஆகியவற்றில் பாரிய மாறுதல்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்துவனவாய் உள்ளமை கண்கூடு. விஞ்ஞான, தொழிநுட்ப ரீதியில் வெகுசன ஊடகங்களின் வளர்ச்சி மெச்சத்தக்கதெனினும், அவற்றின் சமூக ரீதியிலான இடைவினையும், ஆதிக்கமும், பிறழ்வுக் கோலங்களுக்கு அவை வித்திடுவதும் ஆரோக்கியமான நிலைமையன்று.

**வரையறையும், வாழ்வியலும்:**



வெகுசனத் தொடர்பாடல் (Mass Communication) என்பதற்கான வரைவிலக்கணங்கள் இன்று வெவ்வேறு துறைசார் ஆய்வறிவாளர்களால், வெவ்வேறு விதமாக முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள் பின்வரும் வரைவிலக்கணத்தை நாம் பொதுமையானதாக எடுத்தாளலாம்.

"The Process by which a Complex organization, with the aid of one or more machines, produce and transmits publics messages that are directed at large, Chetrogeneous, and scattered audiences"

"பல்தரப்பட்டதும்" பரந்து பட்ட இடங்களில் வாழ்கின்றோருமான சனத்திரளுக்கு (Mass) பொது நிலைப்பட்ட செய்திகளை/தகவல்களை ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இயந்திரங்களின் துணையோடு, தகவல்களை உற்பவித்து, பரம்பல் செய்கின்ற ஒரு பல்படித்தான செயன்முறையே வெகுசனத் தொடர்பாடல்' எனப்படும்".

மறுதலையாக, வெகுசன ஊடகங்கள் 'என்பவற்றை" வெகுசனத் தொடர்பாடலுக்கு வாய்ப்பான ஊடுதளங்கள் / அலைவரிசைகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(The Channels of mass communication) என்பதாக வரையறுக்கலாம். இவ்வெகுசன ஊடகங்கள் அவற்றின் தொழிற்படுமுறைமை, கொள்கை, நிர்வாகம், தொழில்நுட்பம், இலக்குக் குழு, அரசியல் சார்பு ஆகிய நிலைகளின் அடிப்படையில் பல்வேறு வகைப்பாடுகளுக்கு உட்படலாம். எவ்வாறாயினும் பொதுவாக வானொலி, தொலைக் காட்சி, பத்திரிகை/சஞ்சிகைகள், திரைப் படங்கள், கணினி, இணையத்தளம் ஆகியவற்றை வெகுசன ஊடகங்கள் என்கின்ற பெருவட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளலாம். தகவல்களைக் கடத்த உதவும் அஞ்சல் முறைமை, தொலைபேசி, தொலைநகல் (Fax), தொலைபன்னி (கடல்வழி), மின்னஞ்சல் (E-mail) என்பனவும் கூட இன்னொரு விதமான தொலைத் தொடர்பு சாதனங்களே.

எனினும், 'வெகுசன ஊடகங்கள்' எனும் போது, அவை சமூகத்துடன் கொள்ளும் உறவும், இடைவினையும் சற்று ஆழமானது - அவதானத் திற்குரியது. இன்று சமூககத்தின் மத்தியில் பல்வேறு நெருக்கடிகளும், கருத்து மயக்கங்களும், நெறிபிறழ்வுகளும் உருவாகி, சமூகக் கட்டு மானமே சிதிலம் அடைந்து கிடக்கின்ற நிலையில், ஊடகங்களின் பார்வையும், வணிகமயப்போக்கும், வன்முறைக்கும், தாழ்வான உணர்ச்சி களுக்குத் 'தீனியிடும்' இயல்பும், இன்னும் சமூகக் கட்டுக் கோப்புக்கு அச்சுறுத்தலாய் அமைகின்றன. ஊடகங்கள் அபரிமிதமாக தொழிநுட்பரீதியில் வளர்ந்துள்ளனவே அன்றி, அவற்றின் கருத்தியலும், நிகழ்ச்சிநிரல் வடிவமைப்பிலும் மெய்யான 'வளர்ச்சி' எய்தப்படவில்லை. எனவேதான், சமூகவியலாளர் கள் பலர் வெகுசன ஊடகங்களின் எதிர்மறையான சமூகத் தாக்கங்களைப் பின்வருமாறு பட்டியலிடுகின்றனர்.

☞ குடும்ப மட்டத்திலான சீரான உறவுச் சம நிலையினைச் சீர்குலைத்துள்ளமை.

☞ சமயவழிபாடு, நம்பிக்கை, சமய விழுமியங்கள் மீதான பற்றுறுதியில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளமை

☞ தீவிரமயமான கருத்துக்கள், செயற்பாடுகள், கொள்கைகளுக்கான 'சமூக ஏற்புடைமையினை' உருவாக்கியமை.

☞ சமூக ஸ்திரப்பாட்டிற்கும் பண்பாட்டுப் பெறுமானங்களின் இருப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றமை

☞ இளமைப் பருவம், குழந்தைப் பருவம் என்பவற்றின் ஸ்படிகத் தன்மையைக் கட்டிக் காக்கவியலாதவாறு மேலாதிக்கம் செய்கின்றமை.

☞ மனிதாயம், மனித நேயம், இதய பாகமான குணாம்சங்களைக் குறுக்கி, மனித வாழ்வியலின் பெறுமதியைக் குறைத்து விட்டமை.

☞ மரபுகள், மரபுசார் கலைகள், பண்பாட்டுப் பெறுபேறுகள் என்பனவற்றை நலிவுபடுத்தி, ஆரோக்கியமற்ற, ஆபாசமான கருத்துக்கள்/ சிந்தனைகள் சமூகத்தில் பரவலுற வழிசமைக்கின் றமை.

☞ குற்றச் செயல்கள் /அமைதியின்மை சமூக மத்தியில் பரவுதலுக்கும் சமூகச் சட்டம் சீர்குலைவதற்கும் காலாகின்றமை.

☞ தனிநபர் வாதம் (individualism) தலைதூக்கவும், நல்ல விழுமியங்கள் வலுவிழக்கவும், உலக மயமாதல், சமயச் சார்பின்மையாதல், கடவுள் வெறுப்பு, தன்னினச் சேர்க்கை, விவாகரத்து, சித்திர வதை, தற்கொலை முயற்சி, சுநலம், மிருகத்தனம், கொலைவெறி, பழிக்குப்பழி, எதேச்சாதிகாரம், நவகாலனித்துவம், ஊழல், இன, மத, சாதி, வர்க்கவெறி, பக்கச்சார்பு என்பனவற்றின் மிதமிஞ்சிய பிரசார ஊதுகுழலாகவும், அதனூடு சமூகக் கட்டொருமைப்பாட்டின் (Social Solidarity) பரம விரோதியாகவும் இன்றைய வெகுசன ஊடகங்கள் தொழிற்படுகின்றன.

**முடிவுரை:**

எனவே, அறிவாற்றல், மனித தர்மம், சகமனித நேசிப்பு, இறையியல் விசுவாசம், பண் பாட்டு விழுமியங்கள் மீதான பிடிமானம் என்பவற்றை நிலைநிறுத்தும் ஒரு பயன்பாட்டுச் சாத்தியம் மிக்க ஒரு புதிய ஊடகக் கொள்கையினை உருவாக்கி, அவற்றை மெதுவாக, ஆனால் ஸ்திரமாக நடை முறைப்படுத்த வேண்டியது சமூகக் கடப் பாடாகிறது. அரசு, சமூகம், ஊடகத்துறையினர், ஊடக விற்பன்னர்/ விமர்சகர்கள், ஊடக நுகர்வோர் யாவருமே இணைந்து எமது சுய பண்பாடு, மரபுகள், சுதேசியச் சமூக வாழ்வியலுக்கு ஏற்ற ஊடக முறைமையினைக் கட்டி எழுப்பி இன்றைய சீரழிவான, நலிவான, அநாச்சாரமான ஊடகக் கலாசாரத்துக்கு எதிரான ஊடகச் சிந்தனை அமைப்பு ஒன்றுக்கான மக்கள் சக்தியினை அணி திரட்ட வேண்டியது எம் முன் உள்ள தலையாய பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகிம்சை, வன்முறை இவ்விரு வழிகளும் போராட்ட அணுகுமுறைகளாகும். மனிதன் பிறந்த காலம் தொட்டு இன்றுவரை தொடரும் போராட்டங்களுக்கு முடிவேயில்லை. அதேவேளையில், அப்போராட்டங்களே வரலாறுகளாகவும் அமைந்து விட்டன.

வன்முறையின் பரிமாணங்கள் ஆலயங்கள் உட்பட அனைத்து நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புகளிலும் காணப்படுகின்றன. இந்த அமைப்புக்கள் நிறுவனங்களை நடத்துவதில் ஆர்வம் காட்டாமல், மனிதநேயம் - மனித மாண்பு என்பவற்றில் ஆர்வம் காட்டவேண்டும். அகிம்சை வழியில் பலத்தைப் பாவித்து மனங்களை மாற்றவேண்டும்.

"நான் வன்முறையை எதிர்க்கின்றேன். ஏனெனில் வன்முறை நன்மை தருவதுபோல் தோன்றினாலும் அதனால், ஏற்படும் நன்மை தற்காலிகமானது. ஆனால், அதனால் ஏற்படும் தீமையோ நிரந்தரமானது" என்ற காந்தியின் சிந்தனைகள் நாம் அனைவரும் அனைத்து நடவடிக்கைகளிலும் அகிம்சை வழியைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

அகிம்சை என்பதின் அர்த்தம் உயிர்கட்கு இம்சை - துன்பம் செய்யாமை ஆகும். ஆனால் உயிர்கட்கு துன்பம் விளைவிப்பது வன்முறையாகும். வன்முறை என்பது ஆரம்பத்தில் நன்மை பயப்பதுபோலத் தோன்றினாலும் பிற்பாடு அதன் விளைவு தீமையாகும்.

ஆன்மீகம் என்பது வன்முறைக்கு எதிரான செயற்பாடாகும். வன்முறைக்குக் காரணியான கோபம் - பகை - வன்மம் - செருக்கு - ஆணவம் போன்ற தீய சக்திகளை முறியடிப்பது ஆன்மீகமாகும். அவ்வகையில் ஆன்மீகப் பணித்தளங்களாகச் செயற்படும் ஆலயங்கள், திருச்சபைகள், உலக அமைப்புக்கள், பொதுத்தொண்டு நிறுவனங்கள், ஆன்மீகத்தை வளர்ப்பதில் பங்காற்ற வேண்டும்.

வன்முறையைக் கையாளுவதில் இளைஞர்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். வன்முறைக் கலாசாரம், வறிய சமூகம் முதல் - பெரும் செல்வந்த சமூகம் வரை புரையோடியுள்ளது. ஆகவே, வன்முறையின் விளைவுகள் அனைத்திற்கும், மானிட சமூகம் முழுவதுக்கும் பங்குண்டு.

இங்கு கிறிஸ்தவ திருச்சபையின் பங்களிப்பும், ஏனைய சமய நிறுவனங்களின் பங்களிப்பும் மிக அவசியமாக உணரப்படுகின்றது. வழிபாடுகள் - கருத்தரங்குகள் - சர்வசமய உரையாடல்கள் அனைத்தும் அகிம்சை, சமாதானம் - ஒப்புரவு இவற்றை வலியுறுத்துவதாக அமைதல் வேண்டும்.

மேலும் அனைத்து மதங்களினதும் அடிப்படைச் சித்தாந்தம், அன்பும், அகிம்சையும் ஆகும். இவற்றை மறந்து விடுவதே பெரும் வன்முறையாகும் ஆகவே அவற்றை பேணிக்கொள்ள வேண்டும்.

***- யாழ் ராதவல்லி -***

---

## வரலாறு படைத்த மட்டக்களப்பு லயன்ஸ் கழகம்

**ல**யன்ஸ் மாவட்டம் 306C யின் கொழும்பு, கண்டி, நுவரேலியா, பதுளை, பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை அடங்கலான 119 கழகங்களுக் கிடையே முதன்மைக் கழகமாகத் தெரிவாகி, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 2004/2005ம் ஆண்டுக்கான ஆண்டு வைபவத்தில் சாம்பியன் விருது பெற்றமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கே பெருமை தேடிக் கொடுக்கும் செயலாகும்.

இக்கழகம், குறிப்பாக சுனாமி அனர்த்தத்தின்போது கால நேரமறிந்து, தேவையறிந்து ஆற்றிய சேவை மக்கள் மனதில் நன்மதிப்பை ஏற்படுத்தியதோடு மாத்திரமல்லாது, சர்வதேச மட்டத்தில் பாராட்டுதலையும், தேசிய மட்டத்தில் வெற்றிவாகையையும் சூட வழிவகுத்தது.

"We Serve" எனும் லயன்ஸ் கழகத்தின் குறிக்கோள் தொடர்ந்தும் சிறப்புடன் செயற்பட வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் வாகரைவாணனின் இன்னாசியார் காவியம்

- நூல் அறிமுகம் -




-மலர்வேந்தன்-



கத்தோலிக்க தமிழ் இலக்கிய உலகிற்கு மற்றுமொரு புதியவரவாக 'இன்னாசியார் காவியம்' வந்துள்ளது. 'ஆரணியகம்' வெளியீடாக வந்துள்ள இக்காவியத்தை இயற்றியிருப்பவர் நாடறிந்த எழுத்தாளரான கவிஞர் வாகரைவாணன் அவர்கள்.

உலகெங்கும் பரவியுள்ள மாபெரும் துறவற அமைப்பான இயேசு சபையை உருவாக்கியவரும், 'புரட்சித்துறவி' என்று போற்றப்படுபவருமான 'இனிக்கோ' எனப்படும் லொயோலா இன்னாசியாரின் வாழ்வை இனிமைமிகு சந்தக் கவிதைகளால் காவியமாக் கியுள்ளார் கவிஞர்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும், நாடறிந்த எழுத்தாளருமான அன்பர் வாகரைவாணன் அவர்கள் ஏற்கெனவே காவியங்கள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைத் தொகுப்பு க்கள், சிறுவர் கதைகள், பாடல்கள் என பல நூல்களை வெளியிட்டவர், தற்போதும் வெளிவந்து கொண்டிருக்கும் 'போது' சஞ்சிகை யின் ஆசிரியர்.

இன்னாசியார் காவியத்தின் அணிந்து ரையில் அருள்தந்தை பெனி அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல் "இவர் இலக்கியத்தில் ஒரு துறைக்குள் தன்னை வரையறுத்துக் கொள்ளவில்லை....... பன்முக ஆளுமை கொண்டவர்' எனக் குறிப்பிட்டிருப்பது மிகச்சரியானது.

இன்று எல்லோரும் கவிதை எழுது கிறேன் என்று புறப்பட்டு வசனம் எது கவிதை எது என்று தெரியாமல் வார்த்தைகளை அடுக்குவதும், காலாவதியாகிப்போன சொற் களைத் தேடிப்பிடித்து தம் கவித்துவத்தை காட்டுவதாக எண்ணி புளகாங்கிதமடைந்து வாசகனுக்கு வெறுப்பேற்றுவதுமான இக்காலத் தில் சீர், தளை அறிந்து சந்தத்தோடு கவிதை பாடுவதில் வல்லவரான வாகரை வாணனுக்கு புதுக்கவிதையில் கூட லயம் பிசகாது. ஆனாலும் மரபுக்கவிதை வழி நின்று அனைவருக்கும் விளங்கும் வண்ணம் எளிய இனிய தமிழ்ச் சொற்களால் பெரும்பாலும் அறுசீர் விருத்தத் தைக் கையாண்டு காவியம் பாடியுள்ளார் கவிஞர்.

வாழ்த்துரை, அணிந்துரை, முன்னுரை நீங்கலாக தொன்னூற்றியொன்பது பக்கங்களில் முப்பத்திரண்டு தலைப்புக்களில் இருநூற்றி எழுபத்திநான்கு கவிதைகளாலான இக்காவி யத்தைப் படிக்கும்போது கவிஞரின் மொழிப் புலமையும், மறைஅறிவும், இறையியலறிவும் இலக்கிய ஆளுமையும் புலப்படுகிறது. காவியத் தின் நுழைவாயிலாக 'இனிக்கோ என்னும் இன்னாசியார்" எனும் தலைப்பில் எழுதப்பட் டுள்ள முன்னுரை ஆய்வுப் புலமையுடன் எழுதப்பட்டிருப்பது சிறப்பானது மட்டுமல்ல பயன்மிக்கதும் கூட.

தூய இன்னாசியாரின் வரலாற்றை காவியமாகப் பாடவந்த கவிஞர் காவிய மரபுகளுக்கும் இடங்கொடுத்துத் தம் காவி யத்தைப் படைக்கத் தவறவில்லை.

இயற்கையைப் பாடாத கவிஞர்கள் இல்லை. வானும் நிலவும், கடலும் காற்றும், மலையும் மலர்க்காடுகளும் கவிஞர்களைக் கவர்ந்து, களிகொள்ளச் செய்து கவிமழை பொழியவைத்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிய இலக்கணத்தில் இயற்கை வர்ணனையும் ஒன்றல்லவா?

இன்னாசியார் காவியத்திலும் இயற்கையின் அழகைக் கவிஞர் பல இடங்களில் இரசிக்க இரசிக்கப் பாடியுள்ளார்.

காவியத்தின் ஆரம்பத்திலேயே திருவுள தேசமான ஸ்பானியாவின் அழகைப் பாடுகிறார்.

நாடதன் வடக்குப் பக்கம்
நதிதவழ் பள்ளத் தாக்கு
ஈடிலா அழகி னோடு
இருபுறம் மலையின் கூட்டம்
காடுகள் பூக்களாகக்
கண்கொள்ளாக் காட்சி யம்மா
ஏடுகள் சொல்லு மாமோ
எழிலதன் அரங்க மாமே!

கவிஞரின் கவிதையில் ஸ்பானியா தேசத்தின் அழகு ஒரு சித்திரம்போல் நம்முன்னே வருகிறது.

இதேபோன்று புனித நாட்டை அறிமுகப் படுத்தும் காட்சியும் கவிச்சுவை மிக்கது.

அலைகடல் தாளம் போடும்
அதற்கேற்ப புட்க ளெல்லாம்
தலைதனை ஆட்டி ஆட்டி
தமக்குள்ளே ரசித்துக்கொள்ளும்
.................................... என்றும்

தலையிலே பூக்க ளோடு
தருவெலாம் பெண்கள் போல
நிலமெலாம் வாசத்தாலே
நிறைந்திடும் காலைப் போது
.................................... என்றும்,

பாடுவது காலைப் போதின் சுகந்தத்தை நம் நாசிக்குக் கொண்டு வருகிறது. இதுபோன்று இத்தாலி தேசத்தின் அழகை வர்ணிப்பதும் சுவையான பாடல்களாக வந்திருக்கின்றன.

இவ்வாறு இயற்கையின் அழகையெல்லாம் இனிய தமிழ்ப்பாக்களால் சிறைப் பிடித்து நம் கண்முன்னே நிறுத்துகிறார் கவிஞர்.

காவியத்தின் நாயகர் 'இனிக்கோ' எனப்படும் இன்னாசியார் பரம்பரைப் பெருமை மிக்க செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர். நாட்டுப்பற்று மிக்க வீரப்பரம்பரையினர். இதனால் இன்னாசியாரும் சிறந்த வீரராக விளங்கியதில் வியப்பில்லை. தாய்நாடான ஸ்பானியாவோடு பிரான்ஸ்நாடு போரிட்டபோது தாய்நாட்டைக் காக்க போர்க்களம் சென்றார் இன்னாசியார்.

போர்க்களத்தில் இன்னாசியார் அச்சமின்றிப் பொருதிய அந்த வீரக் காட்சியை சந்தச் சுவையோடு கவிஞர் பாடுகிறார்.

..............................................

நடைபெறும் யுத்தம் கண்டு
நரம்பது புடைத்த தாலே
இடையதன் வாளி னோடு
இனிக்கோவும் மோத லானான்

பெரும்படை சென்ற போது
பீதியால் மற்றோ ரெல்லாம்
ஒருபடை தானு மின்றி
ஓடவே இனிக்கோ மட்டும்
சிறுபடை அமைத்துக் கொண்டு
தேசமாம் அன்னைக் காக
இரும்படை யுத்தம் செய்வான்
இகமெல்லாம் வியக்கு மாமே

கவிதையைப் படிக்கும்போது இனிக்கோவின் வீரம் தெரிகிறது. பெரும்படை, ஒரு படை, சிறு படை, இரும்படை என்று எழும் வல்லின ஓசையிலே போரின் சத்தம் கேட்கிறது.

இவ்வாறு இனிக்கோ செருக்களமாடிய காட்சியை வர்ணித்துவிட்டு பின் அவர் யுத்தத்தில் காயமுற்று மருத்துவமனையிலே பெற்ற அனுபவங்களால் மனம்மாறி ஆன்மீக வாழ்வுக்குள் புகுந்து அதில் ஆழமாய்த் தோய்ந்தபோது அன்னை மரியா அவருக்குத் தோன்றிய அந்தக் அழகுக் காட்சியை கவிஞர் பாடும்போது கவிதை மெல்லிய தென்றலாய் வந்து நம்மைத் தழுவிச் செல்கிறது.

நீலவெண் ஆடை யோடு
நீள்விழிக் காந்த லோடு
சோலைப் பூங்கரங்க ளோடு
சொர்ணமாம் மேனி யோடு
காலைப்பூ மலர்ச்சி யோடு
கருணையாம் பார்வை யோடு
பாலைப்போல் மொழியி னோடு
பழுதிலாள் தோன்ற லானாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அரிய காட்சியைக் காணும் பேறுபெற்ற இனிக்கோ ஆன்மீக அனுபவங் களைப் பெற்று

"வாழ்க்கையே தியானமாக
வாயெல்லாம் செபமேயாக" -

வாழ்ந்து, புரட்சித் துறவியாக புதிய வரலாறு எழுதியதைத் தம் கவித்திறத்தால் காவிய மாக்கி உள்ளார் கவிஞர்.

இன்னாசியார் காவியத்தைப் படிக்கும் போது எனக்கு இடையிடையே கம்பராமாய ணத்தின் நினைவும் வரத் தவறவில்லை.

மலர் போன்ற முகம் என்று மங்கையரை வர்ணிப்பர் புலவர் .

இங்கே மங்கையரின் முகத்துக்கு மலர் உவமையாகிப் போனது.

முகத்தின் அழகை மேலும் எடுத்து ரைக்க முகம் போன்ற மலர் என்றும் கூறுவர்.

இங்கே உவமை உவமேயமாகிப் போனது. இதனை இலக்கியத்தில் விபரீத அணி என்பர்.

இராமனுக்கு முடிசூட்டு விழா என்ற செய்தி அறிவிக்கப்பட்டது. அதைக் கேட்ட அயோத்தி நகர மக்கள் அளவில்லாத மகிழ்ச்சி யோடு நகரை அலங்கரிக்கத் தொடங்கினர். அக் காட்சியைக் கம்பன்,

மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தென கமுக மார்ந்தன
தங்கொளி முறுவலிற் தாம நான்றன
..................................,

இவ்வாறு செவிகளில் மெல்லோசை வந்து கொஞ்ச பாடிச் செல்வார்.

பெண்களுடைய தொடைகளைப் போல் வாழைமரங்கள் வைக்கப்பட்டிருந்தனவாம். அவர்களுடைய கழுத்துக்கள் போல் கமுக மரங்கள் கட்டப்பட்டிருந்தனவாம். அவர்கள் சிரிக்கும்போது தங்கம் போல் ஒளிவீசும், அழகிய பல்வரிசை போன்று முத்து மாலைகள் தொங்க விடப்பட்டிருந்தனவாம்.

இவ்வாறு உவமையாக வரவேண்டிய வாழையும், கமுகும், முத்தும், மங்கையரின் அங்கங்களால் உவமேயமாகி அழகுபெற்றது போல் இன்னாசியார் காவியத்திலும் இத்தாலி நாட்டின் அழகைக் கவிஞர் பாடுகையில்,

மட்டிதழ் தங்கப் பூக்கள்
மங்கையர் முகத்தைப் போல

என்று பாடுவது இரசிக்கத் தக்கது. இவ்வாறு இலக்கியச் சுவையோடு இன்னாசியார் காவியம் இனிய காவியமாக மலர்ந்திருக்கிறது.

நான் அறிந்தவரையில் இன்னாசியாரின் வரலாறு தமிழில் காவியமாக மலர்ந்திருப்பது இதுவே முதல் தடவை என்று எண்ணுகின்றேன்.

கத்தோலிக்க இலக்கிய உலகுக்கும், தமிழ் இலக்கிய உலகுக்கும் இக்காவியத்தி னூடாக வாகரைவாணன் அணி சேர்த்துள்ளார்.

ஒரு சிறு நெருடல், சீர், தளை கெடாது சீராகக் கவி படைக்கும் வித்தகரான கவிஞர் வாகரைவாணன் படைத்த காவியத்தில் உள்ள கவிதைகள், சில இடங்களில் சீர் குறைந்தும், அசை கெட்டும் வந்திருப்பது துரதிஷ்ட வசமானது. சில இடங்களில் ஒரே பகுதியில் பா வடிவங்கள் மாறியும் வருகின்றன. இது அவசர வேலையில் ஏற்பட்ட கவனக் குறைவாகவும் இருக்கலாம். ஆனாலும் இவை காவியத்தின் சிறப்பை எந்தவிதத்திலும் குறைத்து விடமாட்டா.

எதிர்வரும் ஆண்டில் (2006) இன்னாசியார் விண்ணகம் சென்ற 450 வது ஆண்டு நிறைவையும் அவரின் தோழரும், மறைபரப்பாள ருமான புனித பிரான்சிஸ் சவேரியாரின் 500வது பிறந்தநாளையும், மற்றுமொரு தோழரான புனித பீற்றர் போரின் 500 வது பிறந்த நாளையும் கத்தோலிக்க உலகம் கொண்டாடவுள்ளது.

இம் முப்பெரும் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட உலகெங்கும் வாழும் இயேசுசபைக் குடும்பத்தினர் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இன்னாசியார் காவியம் வெளி வந்திருப்பது காலப்பொருத்தமானது. இன்னாசி யாருக்கு இதைவிடச் சிறந்த காணிக்கை வேறென்ன இருக்கமுடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இறை திட்டத்தில் மீட்பின் பூரணத்துவம்

**கிறிஸ்துவின் மகிமை:**

எமக்கு லூக்கா நற்செய்தி அதிகாரம் 24 திருவசனங்கள் 13-33வரையிலான பகுதியில் தரப்படுகின்றது. எம்மாவுஸ் சீடர்களுடன் இயேசு பேசிக் கொண்டு சென்றனர். பின் அப்பத்தை எடுத்து, இறைபுகழ் கூறி அவர்களுக்கு அளிக்கப் பட்டதுடன் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன. எமக்கும் திருவருட்சாதன வாழ்க்கை முக்கியமென இதிலிருந்து அறியமுடிகிறது.

**கிறிஸ்துவே முன் மாதிரிகை:**

கிறிஸ்து தம் மரணத்தையும், உத்தானத்தையும் குறிப்பிட்டுள்ளார் என்பதை மத்தேயு நற்செய்தி 17ம் அதிகாரம் 22-23 வரையிலான திருவசனங்க ளிலிருந்து அறியமுடிகின்றது. "மானிடமகன் மக்களின் கையில் ஒப்படைக்கப்படவிருக்கின்றார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள் ஆனால், அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்று அதில் காண்கிறோம். அவர் சொன்னது போலவே திருத்துதரில் ஒருவரான யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுத்துக் கொடூர மரணத்திற் குள்ளானார். ஆனால், மூன்றாம் நாளில் உயிர்த்தார். உலகிலேயே இவ்வாறு மரணத்தை வென்றவர் யாருமேயில்லை. எனவே, இறைவனின் மீட்புத்திட்டத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பும் முக்கிய இடம் பெறுகின்றது.

உயிர்த்ததன் பின்னர் தம் சீடர்களுக்குக் கிறிஸ்து பல தடவைகள் காட்சியளித்து, அவர்களை உற்சாகப்படுத்தினார். அச்சந்தர்ப்பங் களிலெல்லாம் தம் மீட்பின் திட்டத்தைத் தொடர்ந்து அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தினார். மாற்கு நற்செய்தி 16ம் அதிகாரம் 15ம் 16ம் திருவசனங்களில் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறை சாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர், நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்" எனக் காண்கிறோம்.

திருத்தூதர்கள் அவரது உயிர்ப்புக்குப் பயமின்றிச் சாட்சியம் கூறினர். நற்செய்தியைப் போதித்தனர். விசுவாசம் கொண்டவர்க்குத் திருமுழுக்கு அளித்தனர். நாமும் திருமுழுக்கு வழியாக உயிர்ப்பின் மகிமையை அனுபவிக்கின்றோம். சென்மபாவத்துடன் பிறக்கும் நாம் திரு முழுக்கு வழியாகவே மீட்படைகின்றோம். புதுவாழ்வு பெறுகிறோம். கிறிஸ்துவின் உயிர்ப்பால் நாம் பாவ விடுதலையடைந்தோம், மீட்படைந்தோம் எனவே, உயிர்ப்பு மனித வாழ்வின் புதுமை எனலாம்.

**உலகம் புதுமைப்படுத்தப்படுகிறது:**

ஆதிப் பெற்றோருக்கு இயற்கையைப் பாதுகாக்க விருத்தி செய்யும் பொறுப்பை இறைவன ளித்தார். புத்தியறிவைக் கொடுத்தார். இதனால் தான், இன்று இயற்கையையே வெற்றி கண்டுள்ளான். அவ்வறிவை வழிப்படுத்திப் படைப்பைப் புதுப்பிக்கத் தூய ஆவியின் ஒளியும் அவனுக்குக் கிடைக்கிறது. அதனால், முதலில் இறைவனை அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் இன்று அவன் இறைவனை மறந்து வாழ்கிறான். உலகத்தை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறான். படைப்பை அழிப்பதன்று, முழுமையாக்கும் செயலில் ஈடுபடவேண்டும் மென்பதே இறைசித்தம்.

திருவிவிலிய - திருவெளிபாட்டில் புதிய வானமும், பூமியும் உருவாகுவது மனிதன் இறை சித்தப்படி செயற்படுவதன்மூலமாகும் என்பதையறிய முடியும். "நான் புதியதொரு விண்ணகத்தையும், புதிய தொரு வையகத்தையும் கண்டேன், முதலிலிருந்த விண்ணகமும் வையகமும் மறைந்து போயின. கடலும் இல்லாமல் போயிற்று" (திருவெளிப்பாடு 21:1-4)

இறைவன் மனிதனோடு வாழ்கிறார் எனக் கூறுவதன் மூலம், முழு உலகமும் நன்மையாக மாறுகையில் இறைவன் அங்கு வாசம் செய்வார் என்பது தெளிவாகிறது. இத்தகைய உலகொன்றை உருவாக்கவேண்டிய பெரும் பொறுப்பு நமக்குண்டு. பேராசை, பொறாமை, காய்மகாரம், பகைமை, அதிகார மோகம், சுயநலம் ஆகிய தீய குணங்களை நீக்கித் துன்பம், வேதனையை அகற்றி அன்புடன் வாழ்ந்தால் புதிய ஜெருசலேம் உருவாகும்.

**மீட்பின் நிறைவான முன்மாதிரிகை:**

பயணம் செய்யும் எமது இலக்கு விண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரசாகும். விண்ணரசை வெற்றிகொண்ட பின்னரே முழு மீட்பையும் நாமடைவோம். அதற்கான ஆயத்தத்தை இவ்வுலகிலேயே நாம் மேற்கொள்ள வேண்டும் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிகாண வேண்டும். (உரோமர் 8:18-19). இன்று மனிதன் இலௌகீக இன்பத்தையே நாடுகின்றான். அவற்றால் ஒருபோதும் இன்பங்காண முடியாது. புனித அகுஸ்தினார் இதையனுபவத்தால் கண்டுள்ளார். "உம்மில் எனது ஆன்மா ஆறுதலடையும் வரை திருப்தி காண்பதில்லை" என்று அவரே கூறியுள்ளார். இறைவனோடு இணைவதால் மட்டுமே மீட்படையலாம் என அவர் விளக்கியதை நாமும் ஏற்று நடக்க வேண்டும்.

**சமுதாயக் கடமைகள் மூலம் நிறைவை அனுபவித்தல்:**

கிறிஸ்தவ அழைப்பென்பதை நாம் பெற்றுள்ளோம். சமுதாய நன்மைக்காக உழைக்க வேண்டும். மதுவெறி, சூதாட்டம் போன்ற தீமைகளுக்குட்பட்டு அடிமையானோரை அன்பாலும், கருணையாலும் மீட்டெடுக்க வேண்டும். சிறுவயதிலிருந்தே இவ்விதமாக முழுச் சமுதாயத்திற்கும் மீட்பைப் பெற்றுக்கொடுக்க முன்வந்து செயற்பட பழகவேண்டும்.

மெற்றில்டா

## நற்கருணையின் பெருமை



நற்கருணையின் ஆண்டவரை நான்
அறிந்ததில்லை
நிலைவாழ்வின் உணவென்றும் நான்
கண்டதில்லை
நகர்ந்து வந்தேன் நாதா - உன்
கருணையின் பெருவிழாவிற்கே
கேட்டறிந்தேன் உன் கருணையின்
பெருமைதனை
வரவேண்டும் அன்பே என்னுள்ளத்தில்
வாழ்வளிக்கும் வள்ளலே - நீ
வாழி வாழி

ஊனமுற்ற வேளையிலும்
உற்றார் இல்லை என்னருகில்
உலகமெல்லாம் தேடினேன்
உண்மையன்பும் கிடைக்கவில்லை
உடைத்தேன் என்னுள்ளமதை
உனக்காக, என் நாதா
உணர்ந்து கொண்டேன் உன்னன்பின்
ஆழம்தனை.

அளிக்கின்றேன் என்னுள்ளமதை
உனக்காக என்நாதா
அளிப்பீரே என் ஆன்மாவின்
நிலைவாழ்வையே,
எடுத்தியம்பி விளக்கிடுவேன்
உலகிற்கு உமதன்பை
எனக்கல்ல வாழ்வென்று வாழ்ந்திடுவேன்
உனக்காக

- மதுஷாலி -

## தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் லண்டன் U.K.

மேற்படி ஒன்றியத்தின் பொதுக் கூட்டத்தில் நடப்பு வருடத் தலைவராக திரு. குணம் விக்ரமசிங்கம், செயலாளராக திரு. சீலன் பஸ்தியாம்பிள்ளை, பொருளாளராக திரு. இ. மகேந்திரன் ஆகியோரும் ஏனைய 25 பேர் கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களை உள்ளடக்கிய புதிய நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதலாவது நிர்வாகசபைக் கூட்டத்தில் புதிய தலைவரின் அழைப்பை ஏற்று முதன் முதலாக லண்டன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட். திரு. இயுஜின் பிரான்சிஸ் அடிகளார் கலந்து கொண்டு ஒன்றியத்தின் நடப்பு வருடச் செயற்திட்டங்களுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினார். இதன் பிரகாரம் உடனடியாக மூன்று தாயகத் தமிழ் மறைமாவட்டங் களிலிருந்தும் சகல அனர்த்தங்களாலும் பாதிக்கப் பட்டு அனாதை களாக்கப்பட்டுள்ள சிறுவர்களின் புனர்வாழ்விற்கு உதவிடும் திட்டம் ஒன்றை ஆயர்கள் ஊடாகப் பெற்று அதை நடைமுறைப்படுத்துமாறு பணியக இயக்குனர் ஆலோசனை வழங்கினார். அதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நிர்வாகசபை ஏற்கனவே கிளிநொச்சி (ஆரோபணம்) சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 20 சிறுவர்களுக்கு உதவிடுமாறு அதன் பொறுப்பாளர் அருட். திரு. ஏறிக் றொசான் அடிகளாரால் கேட்கப்பட்ட திட்டத்தினை யாழ் மறைமாவட்டத்திற்கான திட்டமாக ஏற்று செயற்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு திருமலை-மட்டுநகர் ஆயரோடு தொடர்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. அவ்வாறே மன்னார் ஆயரோடும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

*தகவல்: குணம் (தலைவர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையற்ற தொடர்பாடல்

ஒரு பொது அறிமுகம்
அ. இருதயநாதன்
M.A.M. Phil. (U.K.)



மானுட இருப்பியலுக்கான உறவின் பரிமாணத்தில் தொடர்பாடலே முக்கியப் பங்கு வகிக்கின்றது. இது இரு பக்கத் தன்மை கொண்ட ஓர் ஒற்றை நாணயத்தைப் போன்றது. "தன்னை உரிய முறையில் வெளிப்படுத்தவும் தன்னுடன் தொடர்பாடுபவரின் வெளிப்படுத்து தலை உரிய முறையில் பெற்றுக் கொள்ளவும்" விழைதலே தொடர்பாடலில் உள்ள இரு பக்கங்களாகும். இதனை ஆங்கிலத்தில் "Express and receive" என அழைக்கின்றோம்.

தொடர்பாடலில் எமது தேவைகள், உணர்வுகள், அபிப்பிராயங்கள், கருத்துக்கள் என்பன வெளிப்படுத்தப்படுவதும் பெற்றுக்கொள்ளப் படுவதுமே அடிப்படை என்றால் மிகையாகாது. மனித சமூகம் ஆரம்பம் முதல் இன்றுவரை இவற்றை இன்னுமொருவருக்கு இதமாகத் தெரியப்படுத்தவும், தெரியப்படுத்துபவரிடமிருந்து தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும் தொடர்ந்து முயன்று வருகின்றது.

இவ்வாறு தொடர்பாடல் உறவின் அடிப்படையாக அமைகின்ற போதிலும், அதில் ஏற்படுகின்ற படிமுறை ஒழுங்கீனங்களால் அல்லது ஆரோக்கியமற்ற தன்மையால் தொடர்புகள் - உறவுகள் உருவாகவோ அல்லது வலுப்படவோ செய்யாமல், தேக்க நிலைக்குட்படவும் தொடர் பாடல் இடை வெளியில் சிக்கித் தவிக்கவும் சில வேளை சிதையவும், மன உணர்வுகள் பாதிப்புற்று ஈற்றில் வாழ்வே துன்பகரமானதாக மாறவும் இத் தொடர்பாடல் அமைந்து விடுகின்றது.

மற்றும், தொடர்பாடலில் ஏற்படும் சீரற்ற தன்மை, படிமுறையின் ஆரோக்கியமற்ற தன்மை எம்மை தொடர்புபடுத்துவதற்குப் பதிலாக பிரிக்கவோ, பிரிந்துபோகவோ, தனிமைப் படுத்தவோ, தன் உணர்வு களை வெளிப்படுத்தாமல் அடக்கி ஒடுக்கவோ அல்லது அத்தகைய உணர்வுகளின் ஆளுகைக்குட்படவோ காரணமாகியும் விடுகின்றன.

ஆனால், வெளிப்படுத்தலும் பெற்றுக் கொள்ளலும் ஒன்றுக் கொன்று உதவுவதாக ஆதரவளிப்பதாக அமைந்துவிட்டால் தொடர்பாடலில் ஈடுபடுவோர், தாம் பயன்படுத்தும் வார்த்தைகள், கருத்துக்கள், அபிப்பிராயங்களுக்கு அப்பால் மனமொத்த இதயபூர்வ இணைவினைப் பெறுகின்றனர். அவ்விணைவில், ஒருவர் ஒருவரை ஆழமாகப்புரிந்து கொள்ளவும், விளங்கிக்கொள்ளவும் வாய்ப்புக் கிட்டுகிறது. அத்துடன் இருபக்க இதய இணைப்பானது, மன இடைவெளிகளைக் களை வதுடன் வெவ்வேறுபட்ட அபிப்பிராயங்கள், கருத்துப்பேதங்கள், ஒத்துவராத கொள்கைகள் இப்படி மனித உறவினை ஆழப்படுத்தவோ அகலப்படுத்தவோ தடையாக அமையும் பல காரணிகளையும் தாண்டி, ஒருவர் ஒருவருக்கு இதய பூர்வமாகச் செவிமடுக்கவும், உடன்படா விடயங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அதனை மதிக்கவும் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, தொடர்பாடலில் இதய இணைவை ஏற்படுத்துவதே பிரதான அம்சமாக இங்குள்ளது.

தொடர்பாடல் பற்றிய ஆய்வுப் படிமுறையில், ஒருபக்கத் தொடர் பாடலை விடுத்து இருபக்கத் தொடர் பாடல் முன்னர் வலியுறுத்தப்பட்டது. அத்துடன் உரியதை உரிய முறையில் இதமாகவும் பக்குவமாகவும் வெளிப் படுத்துவதை முன்னுரிமையாக அது கொண்டிருந்தது.

பின்னான காலங்களில், அவைகூட தொடர்பாடலில் ஈடுபடுவோர் இதயபூர் வமாக மன இணைவுக்கு ஆட்பட வில்லை. ஓர் இடைவெளி தொடர்ந்து இருந்து கொண்டே வந்தது. இவ்வாறு இதய இடைவெளி ஏற்பட எவை எவை காரணம் என்பது பற்றிய ஆழமான அகஉற்று நோக்கலும் சுய ஆய்வும் பெருமளவில் மேற்கொள்ளப் பட்டதன் விளைவே இந்த இதய இணைவுத் தொடர்பாடல் என்று, இன்று அறிமுகம் செய்யப் படுகின்றது.

இரு பக்கத் தொடர்பாடலில், தொடர்பாடல் இடம்பெற்ற போதிலும், அங்கு தொடர்பாடலில் ஈடுபடுவோர் இரு துருவங்களாகவே உள்ளனர். அவரவர் உணர்வுகள் இதய இணைவு ஏற்படாத போது, ஒருவர் பிறருக்கு வெளிப்படுத்த முற்படுவதென்பது பரிமாற்றமாக இல்லாமல் திணிப்பாக மற்றவரால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதுவே வன் தொடர்பாடலாக மாறிவிடுகிறது. மன ஏக்கங்கள், கருத்துக்கள், அபிப் பிராயங்கள் உரிய முறையில் வெளிப் படுத்தப்பட முடியாமலும் பெற்றுக் கொள்ள முடியாமலும் உள்ளக தடை கள் ஏற்படுவதனால், தொடர்பாடியும் ஒருவர் ஒருவரை பரஸ்பரம் விளங்கிக் கொள்ள முடியாமல் அல்லது புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தனிநபர் / குடும்ப / நிறுவன / சமூக அமைதி, மகிழ்வு, நிம்மதி, மனநிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன சிதைந்து தனிமை, மனவெறுப்பு, அதிருப்தி, வேதனை, எரிச்சல் போன்ற வாழ்க்கைக்கு உதவி செய்யாத உணர்வுகள் தலை தூக்கி வாழ்வை அலங் கோலப்படுத்தி விடுகின்றன. இவை மாத்திரமல்ல இத்தகைய மறை மன உணர்வுகள் உறவுப் பிரிவுக்கும், ஒருவர் ஒருவரில் கொண்டிருக்கும் மதிப்பு, மரியாதையை சிதைப் பதற்கும் அக்கறை, கரிசனை, அன்பு, நேசம் போன்ற நல்லுணர்வு களின் வீரியத்தைக் குறைப்பதற்கும், ஒருவர் தனது மன உணர்ச்சிகளை தன்னைப் பாதுகாக்கும் பொருட்டு மையப் படுத்தி வாழ்வதற்கும் காரணமாகி விடுகின்றன.

தொடர்பாடல் என்பது வெறுமனே எமது உணர்வுகளை வெளிப்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடுவதில்லை. மாறாக, அது எமது சிந்தனை, அறிவு, பார்வைக் கோணம், மனநிலை, விழுமி யங்கள், நம்பிக்கைகள், நியாயங்கள், கருத்து, அபிப்பிராயங்கள் என்பன வற்றை பரிமாற்றம் செய்கிறது. அதனால் நாம் எம்மையறியாமல் தொடர்பாடலுக்கூடாக மேற் கூறிய அம்சங்களை பரிமாற்றம் செய்கி றோம் அல்லது பிறரில் திணிக்க முயல்கின்றோம் அல்லது தொடர்பு படுபவர் தன்னுடைய சிந்தனை, அபிப்பிராயம், கருத்து, உணர்வுகள், பார்வைக் கோணங்கள், மதிப்பீடுகள், நம்பிக்கைகள் போன்றவற்றை முழுமையாக வெளிப்படுத்தாமல் தனக்குள் அடக்கி ஒடுக்கச் செய்து விடுகின்றோம். இத்தகைய அடக்கி ஒடுக்கல், தொடர்பாடல் இடை வெளியை மாத்திரமல்ல அக அமைதியின்மை, தான் அடிபட்டுப் போவதான, உள ரீதியான பாதிப் பையும் மன வேதனையையும், நிம்மதியற்ற உளப் பதட்டத்தையும் கொண்டு வருகின்றது. குடும்பங் களில் தம்பதியரிடையே மன இடைவெளி, பெற்றோர் பிள்ளை களிடையே உறவில் விரிசல், குடும்ப அமைதியின்மை, ஒருவரை ஒருவர் தாக்குதல், பதில் தாக்குதலில் ஈடுபடுதல், குற்றம் சுமத்துதல், பழி சுமத்துதல், விமர்சனம் செய்தல் இப்படி ஏராளமான விடயங்களு க்கும் வழி வகுக்கின்றன.

ஒருவர் எப்போது தனது உணர்வுகள், கருத்துக்கள், அபிப் பிராயங்கள் செவிமடுக்கப் படாமல், ஏற்றுக் கொள்ளப்படாமல், புரிந்து கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படு கின்றது, ஓரம் கட்டப்படுகின்றது, ஒதுக்கப்படுகின்றது, நிர்ப்பந்திக்கப் படுகிறதென உணர்கின்றாரோ அப்போது அவர் மன இடைவெளி அல்லது இதய இணைவற்ற நிலைக்கு உட் படுத்தப் படுகின்றார்.

இத்தகைய நிலை, மன அழுத்தத்துக்கும், மனக் காயங் களுக்கும், உணர்வுகள் புண் படவும், மறை மன உணர்ச்சி களைத் தூண்டி விடவும், வாய்த்தர்க்கம், விதண்டாவாதம், ஏசுதல், பேசுதல், பழித்தல், அவமதித்தல், அடித்தல், கோபித்தல், நக்கலடித்தல், குறை காணல் போன்ற வாய்வழி, உடலியல் மற்றும் உளம்சார் வன்முறைக்கும் வித்திடுகின்றன. இதனையே வன் தொடர்பாடல் என அழைக்கின்றோம்.

பொதுவாக வன்முறையில் ஈடுபடுவோர் ; அவ்வாறு ஈடுபட்டபின் தன்மீது வெறுப்புக் கொள்ளவும் தன்னையே நிந்தித்து எரிச்சலுறவும், இவ் உணர்வுகளை வெளியே கூறமுடியாமல் அடக்கியொடுக்கவும், இதனால் தான் செய்தவற்றுக்கு நியாயம் கற்பித்து தொடர்ந்தும் தான் சரி என நிலைப்பாடு எடுத்து விடாப் பிடியாக தனது ஆரோக்கியமற்ற நடத்தையில் ஈடுபடவும் முயற்சிக்கி ன்றனர். எனவே ஆரோக்கியமற்ற தொடர்பாடல், வன்முறை புரிவோரை மேலும் வன்முறையாளர்களாக மாற்றவும் அதில் நிலைத்திருக்கவும் செய்வதினால் மாற்றங்களுக்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகின்றது. அல்லது உள்ளூர் வழக்கில் கூறுவதென்றால் திருந்த இட மில்லாமல் போகின்றது.

தொடர்பாடல் சமூக உளப் பிரச்சினைகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு பட்டது. தற்கொலை புரிவோரை எடுத்துக் கொண்டால் தமது தாக்கங்களை, பாதிப்புக்களை வெளியேகூறி ஆறுதல் பெறவோ அல்லது ஆலோ சனை பெறவோ முடியாமல் உணர்ச்சி வேகத்தில் விரைவான முடிவுகளை எடுத்து ஈற்றில் தன்னை அழித்துக் கொள்ளும் நிலையை உருவாக்கிக் கொள்கின்றனர். தொடர்பாடல் என்பது எமது துயரங்கள், வேதனைகள் அனைத்தையும் வெளிப்படுத்த உதவுவதுடன் அதற்கூடாக ஆறுத லையும் இதய இணைப்பையும் பெற்றுத் தருகிறது. இதனைப் பெற முடியாதவர்களே இத்தகைய சமூக பிரச்சினைகளுக்கு இலகுவாக ஆட்படுகின்றனர்.

தொடர்பாடல் என்பது பெருமளவு மொழியில் தங்கி உள்ளது. மொழி என்று கூறும் போது அது சிலவேளை எழுத்துருக் களையும் ஒலிகளையும் கொண் டிருக்கும். அத்துடன் ஒலியில்லா பேச்சும் மொழிக்கு உதவுகின்றன. இததைத் தவிர உடல் அசைவு, தோற்றம் கூட ஒரு வகைத் தொடர் பாடல் ஊடகமே. இத்தகைய அனைத்து ஊடகங்களுக் கூடா கவும் எமது உணர்வுகளையும் அவற்றுக்கான தேவைகளையும் வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்படும்போது ஒருவகை வன்முறை தலை தூக்குகின்றது. வன்முறை மானிட வாழ்வில் பல்வேறு வடிவங் களில் வெளிப்பட்டாலும் பொதுவாக வாய்மொழி வன்முறையாகவும் உடலில் வெளிக்காட்டப்படும் வன் முறையாகவும் இவை இரண்டி னூடாக அனுபவிக்கப்படும் உளம் சார் வன்முறையாகவும் அமை கின்றது. தொடர்பாடலுக்கும் வன் முறைக்கும் இடையில் சிறியதொரு இடைவெளியே உள்ளது. வன் முறையென்பது தொடர்பாட முடியாதபோது அல்லது இயலாத நிலை எழும்போது தொடர்பாடலுக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாக அடைய வேண்டியதை குறுக்குவழியில் பெற்றுக்கொள்ளும் ஓர் ஊடகமாக மாறிவிடுகிறது. உதாரணமாக, நான் எனது கருத்துக்கள் எடுபடவில்லை என உணரும்போது அக்கருத்தை எடுபடவைக்க ஒன்றில் பலாத்காரத்தை பிரயோகிக்கலாம் அல்லது அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம் அல்லது எனது உணர்வுகளை அடக்கி ஒடுக்கி வேறொன்றில் இடம்பெயர் வெளிப்படுத்துதலாக வெளிக்காட்டலாம். இதனையே வன்தொடர்பாடல் என்கிறோம். ஆரோக்கியமற்ற முறைகளில் வெளிப்படுத்தாமலும் வன்முறை வழிகளில் பெற்றுக்கொள்ளச் செய்யாமலும் இதயபூர்வமாக இருதரப்புக்கும் உதவும் வகையில் ஆரோக்கியமாக வெளிப்படுத்தி பெற்றுக் கொண்டு தமது தொடர்பாடல் தேவைகளை இரு தரப்பும் பூர்த்தி செய்வதையே வன்முறையற்ற தொடர்பாடல் அறிமுகம் செய்கின்றது.

இத்தொடர்பாடலின் மாதிரியானது ஒரு செல்லிடத் தொலைபேசிக்கு ஒப்பானது. அதில் பேச விரும்புபவர் முதலில் தொடர்பினை அல்லது இணைவினை ஏற்படுத்த வேண்டும். அந்த இணைவு நீடிக்கும் வரையிலேயே எமது தொடர்பாடலும் நீடிக்கும். தொடர்பாடலை நீடிக்க இணைவைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே எமது தொடர்பாடலுக்கும் இதய இணைவு அவசியம். அவ் இணைவு இல்லாதபோது அது தொடர்பாடலாக இருப்பதில்லை. தருவதுடன் அதனை எவ்வாறு அன்றாட வாழ்வில் பயன்படுத்தலாம் என்பதனையும் கூறுகின்றது. அத்துடன் எமது அன்றாடவாழ்வில் இருந்து வன்முறையைக் குறைக்கும் தொடர் பாடல் சார் கூறுகளையும் இது தருகின்றது. எமது அறிவைப் பயன்படுத்தி பிறரை அடக்கி ஒடுக்காமல் இதய இணைவுக் கூடாக தானும் வெளிப்பட்டு பிறரையும் வெளிப்படவைத்து அதில் தொடர் பாடலை மெருகூட்டுவதே வன்முறையற்ற தொடர்பாடலாகும். அடுத்த இதழில் இதனை ஆழமாக பகுதி பகுதியாக நோக்குவோம்.

# வெள்ளிவிழாகாணும் அருட்தந்தையரை வாழ்த்துகிறோம்





திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் குரு முதல்வர் அருள்தந்தை A. **தேவதாசன்** அவர்களும், தாழங்குடாப் பங்குத்தந்தை அருள்தந்தை J.S. **மொறாயஸ்** அவர்களும் இம்மாதம் (ஆகஸ்ட் 25ம் திகதி) தமது குருத்துவ வாழ்வில் இருபத்தியைந்து ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழாக் காண்கின்றனர்.

1980ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர்கள் நமது மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பலதரப்பட்ட பணிகளைப் புரிந்து தலத்திருச்சபையின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள். சிறப்பாக அருள்தந்தை தேவா அவர்கள் சமூகத் தொடர்பு நிலைய இயக்குனராக, தொண்டன் ஆசிரியராக பல்லாண்டுகள் பணிபுரிந்தவர். இன்றும் நமது பணிகளில் எப்போதும் ஒத்துழைப்பு வழங்குபவர்.


வெள்ளிவிழாக் காணும் இருகுருக்களும் பணிவாழ்வில் மேலும் வளரவும், நல்லாரோக்கியமும், இறையருளும் நிறைவாகப் பெற்று நீண்டநாள் நாள் வாழவும் நெஞ்சார வாழ்த்துகிறோம்.

~ தொண்டன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தொண்டனின் சில நிமிடங்கள்" செவ்வித் தொடருக்காக இம்முறை திரு அன்டன் ஜோன் டயஸ் அவர்களைச் சந்தித்தோம். இச்சந்திப்பு கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

அன்டன் ஜோன் டயஸ் அவர்கள் தொழிற்றகைமை பெற்ற சுழியோடி ஆவார். சுழியோடித்துறையில் விசேட பயிற்சி பெற்ற இவரை 'தொண்டனுக்காக' சந்திக்க அணுகிய போது பெரு மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார். திருகோணமலையைச் சேர்ந்த இவர், 1961ம் ஆண்டில் பிறந்தவர். இளம் குடும்பஸ்தர். கையில் விவிலியத்துடன் எப் பொழுதும் காணப்படுபவர்: தற்போது கம்பஹாவில் வசித்து வருகின்றார். மும்மொழிகளிலும் சரளமாக உரையாடும் வல்லமை பெற்றவர்.

**:-உங்கள் இளமைக்கால வாழ்க்கை பற்றி சிறிது சொல்லுங்கள்.**

:- நான் திருகோணமலையைச் சேர்ந்தவன். திருகோணமலை புனித. ஜோசப் கல்லூரியில் எனது கல்வியைப் பெற்றேன். அவை மிகவும் இனிமையான நாட்கள்.

**:- சுழியோடித்துறையில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

:- உண்மையில், சுழியோடித்துறையில் நான் ஈடுபாடு கொள்ள நேரிட்டது தற்செயலான நிகழ்ச்சிதான். எனது மாமனார் ஒருவர் கப்பலில் பணி புரிபவர். விடுமுறையில் வீடு வரும்போது நிறையப் பொருட்கள் கொண்டு வருவார். அதைப் பார்க்கும்போது கப்பலில் வேலை பார்க்கவேண்டும் என்னும் எண்ணம் வலுப்பெற்றது. மாமாவும் என்னைக் கப்பலில் சேர்த்து விடுவதாகக் கூறினார். ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவேயில்லை.

**:- அவ்வாறாயின், எவ்வாறு சுழியோடித்துறையில் ஈடுபட்டீர்கள்?**

:- கடற்படைக்கு ஆட்சேர்ப்புக்கான விளம்பரம் 1980ம் ஆண்டில் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் பட்டிருந்தது. எனக்குத் தெரியாமலே, எனது தகப்பனார் எனது பெயருக்கு விண்ணப்பம் செய்துவிட்டார். நேர்முகப் பரீட்சைக்குக் கடிதம் வந்த பின்னர்தான் எனக்கு விடயம் தெரிய வந்தது. நான் மறுத்து விட்டேன். நேர்முகப் பரீட்சைக்குப் போகாவிட்டால் வீட்டில் இடமில்லை என்று தகப்பனார் கூறிவிட்டார். வேறு வழியில்லாமல் சம்மதம் தெரிவிக்கவேண்டி ஏற்பட்டது.

**:- அப்படியாயின், கடற்படையில் சேர்ந்த பின்னர்தான் சுழியோடிப் பயிற்சி பெற்றீர்களா?**

:- ஆம்! பல்வேறுபட்ட நேர்முகப் பரீட்சைகளின் பின்னர் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டேன். ஆரம்பப் பயிற்சிகளின் பின் கடற்படை வீரன் ஆனேன். ஒவ்வொரு வீரனும் ஏதாவது ஒரு விசேட துறையில் சிறப்புப் பயிற்சி பெறவேண்டும். நான் சுழியோடிப் பயிற்சிக்கு விண்ணப்பித்தேன்.

**:- சுழியோடிப் பயிற்சி பெறவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது? அதாவது அது ஏன் உங்களைக் கவர்ந்தது?**

:- ஏதாவது ஒரு துறையைத் தெரிவு செய்யவேண்டிய அவசியம் இருந்தது. சுழியோடும் பிரிவினருக்கு இரட்டைச் சம்பளம், வெளிநாட்டில் பயிற்சி, விசேட சாப்பாட்டு வசதி என்பன வழங்கப்படுவது வழக்கம். அத்துடன் சுழியோடிகள் தனிப்பட்ட 'குழு'வாகச் செயற்படுவர். இவ்வாறான அம்சங்கள் என்னைக் கவர்ந்தன.

**:- எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டீர்கள்?**

:- சுமார் அறுபது பேர் விண்ணப்பித்தோம். ஐந்துபேரே தெரிவு செய்யப்பட்டோம். தெரிவுக்காகப் பல நேர்முகத் தேர்வுகள், செய்முறைத் தேர்வுகள் என்பன இடம் பெற்றன. பல கிலோமீற்றர்கள் தூரம் நீச்சல் செய்ய வேண்டியும் ஏற்பட்டது.

**:- எவ்வளவு காலம் பயிற்சிகள் தந்தார்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

:- சுமார் ஆறு மாதகாலம்.

**:- கடற்படைச் சுழியோடிகளின் பணிகள் என்ன?**

:- கடலுக்கடியில் சென்று கப்பல்களில் காணப்படும் பிழைகளைத் திருத்தல், உதிரிப்பாகங்கள் சரியாக உள்ளனவா, இயங்குகின்றனவா என செவ்வைப்பார்த்தல், கடலில் மூழ்கியவர்களைக் காப்பாற்றுதல், கப்பற் போக்குவரத்திற்குத் தடையாக இருக்கும் கடற்பாறைகளைக் கண்ணி வெடிவைத்து உடைத்து போக்குவரத்துக்களைச் சீர்ப்படுத்தல் என்பன சில பிரதான பணிகள்.

**:- அவ்வாறாயின், ஏன் கடற்படைச் சுழியோடும் பணியில் இருந்து விலகிக் கொண்டீர்கள்?**

:- அவுஸ்திரேலியாவில் உள்ள நிறுவனம் ஒன்றில் Advance diving பயிற்சி நெறிக்கு புலமைப் பரிசில் ஒன்று வழங்கப்பட்டது. அதற்குப் பூரண தகுதியுடையவன் நான் மட்டுமே. ஆனால் பெரும்பான்மையின வீரர் ஒருவரே தெரிவு செய்யப்பட்டார். நான் மனமுடைந்து விட்டேன். எனவே பன்னிரெண்டு வருடத்துடன் சேவையை முடித்துக் கொண்டேன்.

**:- அதன் பின்னர் என்ன செய்தீர்கள்?**

:- ஒரு வருடம் கட்டாரில் பணியாற்றினேன். பின்னர் நான்கு வருடங்கள் சவூதி அராபியாவில் பணியாற்றினேன்.

**:- சவூதியில் உங்கள் பணி என்ன?**

:- அங்கு *Sea water Cooling System (SWCS)* என்னும் நிறுவனத்தில் பணி புரிந்தேன். அந்நிறுவனம் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கட்குத் தேவையான தண்ணீரை விநியோகம் செய்யும். இதற்காகக் கடல் நீரானது 50 மீற்றர் அகலமும், 5 மீற்றர் உயரமும் உள்ள 'கொங்கிறீட்' கால்வாயூடாக 5கிலோமீற்றர் தூரம் நாட்டுக்குள் எடுத்துவரப்பட்டு, எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் குளிர்விக்கப்பட்டு மீண்டும் நீர் கடலுக்குள் விடப்படும். கால்வாய்களில் ஏற்படும் வெடிப்புக்கள், மீன்களால் ஏற்படும் அடைப்புக்கள் என்பனவற்றைத் திருத்துதல், கடலுக்குள் உள்ள இயந்திரப்பம்பிகளைச் சீர் செய்தல் போன்றன என்பணிகள்.

**:- உங்கள் சேவையின்போது உங்களால் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதும் உண்டா?**

:- ஏராளம் உண்டு. ஒருமுறை கடலுக்கடியில் சுழியோடிக்கொண்டிருக்கையில் திடீரென சூரிய வெளிச்சம் இல்லாமல் போய்விட்டது. என்னவென்று பார்க்க மேலெழும்பி வந்துகொண்டிருந்தபோது சுமார் 50மீற்றர் நீளமுள்ள திமிங்கிலம் ஒன்று தலைக்கு மேல் நின்றுகொண்டிருந்தது. நானும் சகாக்களும் சாதுர்யமாக நடந்து தப்பிக்கொண்டோம்

சவூதியில் வேலைசெய்யும்போது சிறு கிளைக் கால்வாயொன்றில் சிக்கிக் கொண்டேன். வேகமான நீரோட்டம், இராட்சத இயந்திரங்களின் விசிறி என்பனவற்றில் தப்பினேன். அத்திறமைக்காகவே அச்சவூதி நிறுவனம் எனது சம்பளத்தை இரட்டிப்பாக்கியது. பண்ணைக் கடலில் விழுந்த ஹெலிக் கொப்டர் ஒன்றை இன்னொரு ஹெலிக்கொப்டர் மூலம் கட்டி உயர்த்த முற்பட்டபோது கேபிள் அறுந்து ஹெலி கடலுக்குள் இருந்த எனக்குமேல் விழுந்தது. எனினும் இயேசுவின் அருளால் காப்பாற்றப்பட்டேன்.

**:- இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

:- சுழியோடும் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணினேன். ஆனால் பொருளாதாரம் இடம் கொடுக்க வில்லை. 'கலர்மீன்கள்' பிடிக்கலாம், பொருளாதார பலமின்மை, படையினரின் தடைகள் என்பனவற்றால் அவ்வாறு செய்ய இயலவில்லை.

**:- கடற்படையில் சேராமல் எமது இளைஞர்கள் சுழியோடும் பயிற்சிகள் பெற வாய்ப்புண்டா?**

:- ஆம், சில அரசாங்க, தனியார் நிறுவனங்கள் இப்பயிற்சிகளை வழங்குகின்றன.

திரு. அன்டன் ஜோன் டயஸ் அவர்கட்கு தொண்டனின் சார்பாக நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டோம்.

*(குறிப்பு :மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிராந்திய கடற்றொழில் பயிற்சிக்கல்லூரிகளில் சுழியோடும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மட்டக்களப்பு நாவலடியில் இயங்கிய கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி தற்போது (கடற்பேரேலையின் பின்) கல்லடிப்பாலத்திற்கருகில் உள்ள மீன் பிடிக் கூட்டுத்தாபன கட்டடத்தில் இயங்குகின்றது.)*

**-ஆழியோன்-**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*R. ஸ்ரான்லி பிரபாகரன்*

## மனதை ஆராய மனிதன் முனைகிறான்



நாம் குடும்பத்தில் ஓர் அங்கத்தினர் என்ற வகையில் குடும்பத்தினருடம் அன்பாகப் பழகுகின்றோம். சிலவேளைகளில் கோபம் கூடக் கொள்கிறோம். இவ்வாறு பழகுவது, குடும்பத்தினருடன் நடந்து கொள்ளும் முறைகள் என்பன பற்றி குடும்பத்தின் ஏனைய அங்கத்தினர் தமக்கிடையே பேசிக்கொள்வதுண்டு. ஒருவருடன் நெருக்கமாகப் பழகுகின்றவர்கள் அவரது நடத்தைகள், குணங்கள் இவற்றில் சிறியதொரு மாற்றத்தைக் கூட அவதானித்து அதனைத் தெரிவித்து விடுவார். இவ்வாறு தெரிவிப்பதற்கு முக்கியமானது என்ன தெரியுமா? நாம் நெருக்கமாகப் பழகுகின்ற அந்த நபரை நாம் மிக நுணுக்கமாக நோக்கவேண்டும்.

இங்கே நாம் குடும்பத்தில் சக குடும்ப அங்கத்தினரின் மனநிலை மாற்றத்தை அவதானித்து கருத்துக் களைத் தெரிவிப்பதுபோல கிராமத்திலும், சமூகத் திலும், இக்கருத்துக்கள் தெரிவிக்கின்ற முறை காணப் படுகின்றது. மேலும் சமூகத்தில் அனைவருக்கும் தெரிந்த ஒருவராக இருந்தாலும், அவரைப்பற்றிய பேச்சு அனைவரது காதுகளுக்கும் சென்றுவிடுவதுண்டு.

எனவே, மனிதனின் மனநிலை, மனநிலை மாற்றம், நடத்தை மாற்றம் என்பனவற்றினை அவதானித் தலும், கருத்துக் கூறுதலும், முடிவுக்கு வருதலும் என்பன மனித குலத்திடம் காணப்படுகின்ற ஒரு முறையாக உள்ளது. ஆனால், அந்த நடத்தைகளை அவதானித்து முடிவுக்கு வருகின்ற முறைதான் முக்கிய மானது. இங்கேதான் உளவியல் ஓர் அறிவுத் துறை என்கின்ற நிலையைப் பற்றி நாம் சிந்திக்க முனைகின்றோம். அதாவது, மனிதன் ஆண்டாண்டு காலமாக தன் உளநிலை பற்றியும், தன்னுடைய நடத்தைகள் பற்றியும் சிந்தித்தே வந்துள்ளான். ஒரு மனிதன் மற்றொருவனைக் கையாளுகின்ற முறைகளை காலத் துக்குக் காலம் கண்டு பிடித்து அவற்றினைக் கையாண்டும் வந்துள்ளான். புராதன நிலைப் பட்ட பல்வகையான சடங்குகளிலும், இன்று எம் சமூகங்களில் காணப் படுகின்ற சடங்குகளிலும் மனிதனின் மனநிலையினை மாற்றுகின்ற பல்வேறு நன்மைகளைக் காணலாம்.

ஆனால், உளவியலை இதற்கும் அடுத்த ஒரு தளத்தில் இருந்து விளங்கிக் கொள்வதனால் அது ஓர் அறிவியலாகக் காணப்படுகின்றது என்னும் உண்மைக்குள் நாமும் சேர்ந்து விடுகின்றோம். ஆம், உளவியல் என்னும் அறிவுத் துறை மனித சமூகத்தின் மத்தியில் படிப்படியாகப் பரிண மித்து வந்துள்ள அதே வேளை, இன்றைய சமூகத்திலும் கூட, அன்றாட வாழ்வில் உளம்பற்றி நோக்குகின்ற தன்மை பரந்தும் காணப் படுகின்றது.

இன்றைய உலகில், மனித வாழ்விலே உளவியலுக்கு முக்கியமானதொரு பங்கு உண்டு என்பதை விளக்குவதாக இக்கட்டுரைத் தொடர் அமைகின்றது. எனவே, இக்கட்டுரையில் மனித வரலாற்றில் இந்த உளவியல் என்கின்ற அறிவுத் துறை எவ்வாறு படிப்படியாக வளர்ந்தது என்பதனையும் இன்றைய உலகில் அது எத்தகைய நிலையில் உள்ளது என்பதனையும் மிக எளிமையான முறையிலே விளங்கிக் கொள்வோம்.

மனித வரலாற்றில் மனிதன் பல்வேறு பட்ட அனுபவங்களையும் பெற்றுத்தான் ஒரு விடயத்தைக் கண்டுபிடிக்கின்றான். அவ்வாறு கண்டு பிடித்த விடயத்தைத்தான் ஒரு சந்ததியினர் இன்னுமொரு சந்ததியினருக்கு வழங்குகின்றனர். அவ்வாறு பரிமாறப்படுகின்ற இத்தகைய முடிவுகள் புதிய சந்ததியினரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இத்தகைய தன்மையை நாம் உளவியலிலும் காண்கின்றோம். ஏனெனில், மனிதன் ஆன்மா பற்றிச் சிந்தித்த சில விடயங்கள் உளவியல் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

ஆரம்பகால மனிதன் "தனக்குள்ளேயே இருந்து தன்னை ஆட்டிப்படைக்கும் சக்தி", "தனக்கு வெளியே இருந்து தன்னை ஆட்டிப் படைக்கும் சக்தி" என்பன பற்றிஅன்றே சிந்திக்கத் தொடங்கி விட்டான். அத்தன்மை இன்றும் உள்ளது. இவற்றுள் தன்னகத்தே இருந்து தன்னை இயக்கும் சக்தி பற்றிய மனிதனின் ஆழமான தேடல்தான் இன்று உளவியலை இத்தகைய உயர்நிலைக்குக் கொண்டு சென்றது எனலாம். தன்னகத்தே புகுந்து தன்னைச் சிந்தித்தல் என்னும் விடயம் பற்றி புத்தபெருமானின் போதனைகளும் புலப் படுத்துகின்றன.

மனிதனிடம் காணப்படுகின்ற நல்ல குணம், கெட்ட குணம், உணர்ச்சிகளைக் கை யாள்வது எவ்வாறு, நல்ல குணத்தை வளர்த்துக் கொள்வது எவ்வாறு, என்பனபற்றி சமயமே கருத்துக்களைக் கூறி வந்தது. சமயத்தின் சடங்கு நிலைப்பட்ட காலங்களிலும், அதன் தத்துவ நிலைப் பட்ட காலங்களிலும் மனிதனின் குணப் பண்புகளின் மாற்றத்துக்கான காரணிகள் கூறப்பட்டுவந்து ள்ளன. அத்தோடு அவற்றைச் சீர் செய்வதற்கான வழிமுறைகளும் காணப்பட்டுள்ளது.

மதத்தோடு தொடர்புடைய ஆன்மா பற்றிய கருத்துக்களுக்கு அடுத்தபடியாக, மனிதனோடு, தொடர்புபட்ட வகையில் உளம் பற்றிய தேடலாக இந்தத்துறை பரிணமிக்கலாயிற்று. உள்ளம், மனம் என்கின்ற இந்தப்பயன்பாடுகள் முழுவதுமே ஒரு கருத்துநிலைப்பட்ட அம்சங்களாகவே இருந்தன. அருபமான இந்த விடயங்கள் காலப்போக்கில் விமர்சனங்களுக்கு உள்ளாகியது. உள்ளம் என்ற ஒன்றினையும், அதன் செயற்பாடுகளையும் ஏனையவற்றோடு தொடர்பு அற்ற நிலையில் தனியே காண்பது என்பது முடியாத காரியமாகவே காணப்படுகின்றது. நாம் உள்ளம் என்கின்றோம், மனம் என்கின்றோம் இவற்றை நாம் காண்பதில்லை. இவற்றினைப் புலப்படுத்துகின்ற விடயங்களாக மனித உடலும், அவனது நடத்தைகளும் காணப்படுகின்றன என்பது கண்டு கொள்ளப்பட்டது.

இவ்வாறாக படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த உளவியலானது, இன்று நன்கு வளர்ச்சி அடைந்ததோடு மட்டுமல்லாமல் ஏனைய பல்வேறு துறைகளுக்கும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இத்தகைய சான்றினைப் பெறுவதற்கு உளவியலின் நவீன ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளுமே முக்கியமான காரணியாக அமைந்துள்ளன. இவ்வாறு சிறந்ததொரு அறிவுத் துறையாக வளர்ச்சியடைந்துள்ள உளவியலை எமது அன்றாட வாழ்விலும் நாம் பயன்படுத்த வேண்டுமானால் அதன் நவீன அணுகுமுறைகள் பற்றிய தகவல்கள் பலவற்றினை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## விட்டுக் கொடுத்து வாழ்வோம்

இன்று பலரிடம் இருக்கும் குணங்களில் மிகவும்தீய குணம் எதுவென்றால் அது பிடிவாதம். (தான் செய்வதுதான் சரி என நினைப்பது) "வாதத்திற்கு மருந்துண்டு, ஆனால் பிடிவாதத்திற்கு மருந்தில்லை" என்பார்கள். உண்மைதான். சிறுகுழந்தைகள் பிடிவாதம் பிடித்தால் அடித்தாவது திருத்திக்கொள்ளலாம். ஆனால் அதையே பெரியவர்கள் செய்யும்போது சிறுகுழந்தைகள் எம் மாத்திரம் எனத் தோன்றுகின்றது. உங்கள் பிடிவாதத்தால் நீங்கள் மட்டுமல்ல மற்றவர்களும் பாதிப் படைகிறார்கள் என்பதை உணருகிறீர்களா? நீங்கள் அடிக்கடி பிடிவாதம் பிடிப்பதனால் உங்களிடம் மற்றவர்களுக்கு அன்புக்குப் பதிலாக எரிச்சலே ஏற்படுகிறது. உங்களிடம் நட்பு வைத்துக்கொள்ளவே பயப்படு வார்கள். உங்கள் பிடிவாத குணத்தினால் நிறைய நல்ல சந்தர்ப்பங்களையும், நல்ல நண்பர் களையும் இழக்க நேரிடுகிறது. நமக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கை பொன்னானது. அதை எப்படிக் கொண்டு செல்ல வேண்டுமென்பதை மற்றவர்கள் நமக்குச் சொல்லித்தான் தெரியவேண்டு மென்பதில்லை. எமக்கு நாமே ஒரு கோட்பாட்டை வைத்துக் கொள்ள வேண்டும். எம்மிடம் காணப்படும் சிறு சிறு தவறுகள்தான் எங்களுக்கு நாங்களே கொடுத்துக் கொள்ளும் தண்ட னைகள். நமக்கு வேண்டிய பொருள் அதேசமயம் மற்றவர்களுக்கும் தேவைப்படுமானால் அதைக் கொஞ்சம் விட்டுக் கொடுப்பதில் தப்பில்லை தானே? அப்படி நீங்கள் விட்டுக்கொடுக்கும்போது அந்தப் பொருளுக்கும் உயர்வான, நிறைவான இடம் கிடைக்கலாம். இதனால் உங்களுக்கும் ஒரு நிறைவு வந்து சேரும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. மனித வாழ்க்கையில் விட்டுக் கொடுத்து வாழ்வது ஓர் இயல்பான செயலாய்க் காணப்படுகிறது. அதை நீங்களும் கொஞ்சம் கடைபிடித்துப் பாருங்கள். நீங்கள் விட்டுக் கொடுப்பதால் மற்றவர் சந்தோசம், நிம்மதியடையும் போது உங்களுக்கும் ஒரு திருப்தி ஏற்படும்.

**S. ரீமா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்காக...



"நான் வரமாட்டன், வரவேமாட்டன்... என்ன இளிச்ச வாயனெண்டு நெனச்சியா... புள்ளையாரே... ஒனக்கு நானென்ன குறை வெச்சன்... இல்ல என்ர பொஞ்சாதியும் புள்ளையும் என்ன குறை செய்ததுகள். ஏனப்பா என்ன மட்டும் தனிமரமா போட்டுட்டு அதுகள கடலோட அனுப்பினா... நான் வரமாட்டன் புள்ளையாரே... நான் கோயிலுக்க வரவே மாட்டன்... நான்... போறன்..." இந்த வார்த்தைகளில் தாக்கப்பட்ட வனாக எட்டி நடந்து "என்ன குமாரண்ண இந்தாள் தண்ணியப் போட்டுட்டு உளறிப் போகுதோ" என்றேன். "சேச்சே அப்படியில்லத் தம்பி, பொஞ்சாதி ரெண்டு புள்ளை யளோட, குடும்பத்தில ஏழு சீவன சுனாமிக்கு அள்ளிக் குடுத்துப் போட்டு இப்பிடிப் பைத்தியமா அலை யுறான் பாவி" என்னால் மேலும் விபரம் கேட்க முடியவில்லை. நடந்தேன். செக் பொயின்ற் தாண்டியதும் மூன்று வீடுகள் கடந்து வீதி யோரத்தில் ஓர் அடுப்பு புகைகிறது. அதன் மேல் கரி பிடித்த அலுமினியப் பானையொன்று, அருகிலே அந்த வயோதிபத் தாய், அறுபது வயதைத் தாண்டியவள். தலை நரைத்து, முதுமை குடியேறி தளர்ந்த உடல். வாய் தன்பாட்டில் ஏதோ முணுமுணுத்தபடி, பரட்டைத் தலையும், பழுஞ்சீலையும், சுயமற்ற பேச்சும் ஏன்... ஏனப்பா இந்தத் தாய்க்கு இந்த நிலை? விசாரித்தேன். கணவன் இறந்து விட பெண் பிள்ளையோடு ஊர்விட்டு ஊர் வந்து படாதபாடுபட்டு வளர்த்து, படிப்பித்து அரச தொழிலுமாக்கி மணம் முடித்துக் கொடுத்து, பேரப் பிள்ளையோடு கொஞ்சிக் கொண்டிருந்தாள். கோரப் பசியுடன் பொங்கி வந்த சுனாமியலை குழந்தையையும் தாயையும் அள்ளிக் கொண்டு போக காயங்களுடன் மயங்கிக் கரையொதுங்கிய தாய்தான் இவள். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு இப்பிடித் திரிகிறாளாம். கடவுளே ஏனப்பா இந்த அவலம். இந்த வயோதிபத்தாய் பாவியா அல்லது அவலமாக மடிந்து போன இவளது மகளும் பிஞ்சுக் குழந்தையும் பாவிகளா? எதற்காக இப்படியொரு நிலவரம்? என் சிந்தனைக்குள் நான் உள்மன யாத்திரை செய்தபடியே வினாக்களைக் கேட்கின்றேன். ஆனால், விடைகள் தட்டுப்பட வேயில்லை.

"என்ன தம்பி தாவூத் முகமே நல்லாயில்ல என்ன விசயம், விசாரித்தார் சலாம் ஹாஜியார். ஒரு நீண்ட பெருமூச்சு மட்டுமே அவருக்குப் பதிலாகின்றது. "தம்பி மவுத் தாகிப் போனதுகள் எல்லாம் பாவப்பட்ட துகளில்ல, நன்மை செஞ்சதுகள். ஒரு சில நிமிசங்களுக்குள்ள அதுகள் சீவன அல்லா எடுத்துக் கிட்டான். ஆனா அதுகளயும் அந்த சம்பவத்தையும் நெனச்சி, நெனச்சி தினம் தினம் செத்துக்கிட்டிருக்கிற நாமதான் தம்பி பாவிகள். எனக்குள் ஒரு சலனம், எனது வினா முடிச்சுகள் மெல்ல அவிழ்வது போல ஒரு உணர்வு. "தம்பி நமக்கெல்லாம் அருமையான ஒரு பாடம், ஒங்க எல்லாத்துக்கும் மேல நானொருத்தன் இரிக்கண்டா, என்ன மறந்து வாழாதீங்கண்டு அவன் போட்ட சொடக்குத்தான் இந்த சுனாமி... வேறொண்டு மில்ல... இனிமேலாவது நாம..." "போதும் ஹாஜியார் அருமையாச் சொன்னிங்க நான் வாறன்" நடந்தேன் - கடந்த ஒன்றரை வருடங்களாகப் பிரிந்திருக்கும் என் மனைவியை யும் மகள் துஷானியையும் காண வேகமாக நடந்தேன்.

**பைந்தமிழ்க் குமரன் தாவீது**
*பாண்டிருப்பு, கல்முனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி


பிறப்பு 27 * 07 * 1936



இறப்பு 16 * 05 * 2003

**பிலோமினா**

பிறப்பு 17 * 11 * 1935



இறப்பு 30 * 08 * 2004


**தவமணிக்குமார்**

அன்புப் பறவைகளாகக் கூடு கட்டி வாழ்ந்த எங்கள் குலதெய்வங்களின் அடுத்தடுத்த இழப்பினால் ஆறாத்துயருற்றிருக்கும் நாம் இயேசுவுக்குள் ஒன்றாகி நிற்கும் அக் கருணை உள்ளங்களின் ஆசீர்வாதத்திற்காக ஆவலோடு இறைஞ்சி நின்று துதிக்கின்றோம். விண்ணகத்தில் பிறந்துள்ள இவர்களின் ஆத்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்கின்றோம்.

உங்கள் அன்பு மகன், மருமகள், பேத்தி, மச்சாள், மருமக்கள், மற்றும் உறவினர்கள்.

8/3, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.


# நினைவஞ்சலி



பிறப்பு 12 * 01 * 1970



இறப்பு 08 * 08 * 1995



**அ. அலெக்சான்றா (வவி)**

அன்பின் ஊற்றான மகளே வவி! நீ இந்த மண்ணை விட்டுச் சென்று, 10 ஆண்டுகள் சென்றாலும் உன் அன்பு உருவம் மறக்க முடியுமா? உன்னில் அன்பு, பாசம் வைத்த எல்லோருக்கும் பணிகள் பல செய்தாய். கல்லூரியிலும், வெளியிலும் பாசத்தைப் பெற்றாய். நீ சென்ற இடம் எல்லாம் பணிவாய் நடந்து பாச உறவுகளைப் பெற்றாய். உன் உலக வாழ்வு முடிந்து விட்டது. "என் வான் வீட்டிற்கு வா, மகளே!" என்று அழைத்துக் கொண்டார் தேவன்.

ஆண்டவர் காலடியில் ஆத்மா சாந்தி அடைவதாக!

தாய் (விக்டோரியா), சகோதரர்கள்

8/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர்களுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி 30 - 09 - 2005**




# விவிலியம் கற்போம் - 41

**(விடுதலைப் பயணம் 16: 9-24)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே ஆரோனிடம் "நீர் மக்கள் கூட்டமைப்பை நோக்கி: ஆண்டவர் திருமுன் அணுகிச் செல்லுங்கள் என்று சொல்லும்" என்றார். அவ்வாறே ஆரோனும் பேசிக்கொண்டிருக்கையில் ........................ பக்கமாய்த் திரும்பினார்கள். அப்போது, ஆண்டவரின் மாட்சி மேகத்தில் தோன்றியது. ஆண்டவர் மோசேயை நோக்கி "இஸ்ரயேல் மக்களின் ............................ நான் கேட்டுள்ளேன். நீ அவர்களிடம் "மாலையில் நீங்கள் இறைச்சி உண்ணலாம். காலையில் அப்பம் உண்டு நிறைவடையலாம் என்று சொல்" என்றார். மாலையில் .......................... வந்து கூடாரங்களை மூடிக்கொண்டன. காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றிப் படிந்திருந்தது. பனிப்படலம் மறைந்தபோது பாலைநிலப் பரப்பின் மேல் .......................... தட்டையான, மெல்லிய உறைபனி போன்ற சிறிய பொருள் காணப்பட்டது. இஸ்ரயேல்' மக்கள் அதைப்பார்த்து விட்டு ஒருவரை ஒருவர் நோக்கி "....................." என்றனர். ஏனெனில், அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்போது மோசே அவர்களை நோக்கி "ஆண்டவர் உங்களுக்கு .......................... தந்த அப்பம் இதுவே: உங்களில் ஒவ்வொருவனும் தான் உண்ணும் அளவுக்கு இதினின்று சேகரித்துக் கொள்வானாக. அதாவது, தலைக்கு .......................... அவரவர் கூடாரத்திலுள்ள ஆள்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். ஒவ்வொருவரும் தாம் உண்ணும் அளவுக்கே ........................ . மோசே "இதில் யாருமே எதையும் காலைவரை மீதி வைக்கக் கூடாது" என்றார். ஆயினும், ஒரு சிலர் காலை வரை மீதி வைத்தனர். அது ........................ நாற்றமெடுத்தது. மோசே சினம் கொண்டார். மக்கள் தாம் உண்ணும் அளவிற்கேற்பக் காலைதோறும் சேகரித்தார்கள். ஏனெனில், வெயில் ஏற ஏற அது ..................... ஆனால், ஆறாம் நாளில் கடவுள் அறிவித்தபடி "சாபத்து" தினத்துக்கென மீதியை வைத்திருந்தபோது அவை பழுதடையவில்லை.

**விடைகள்: சேகரித்திருந்தனர், புழுவைத்து, உருகிவிடும், பாலைநில, இரண்டுபடி வீதம், முறையீடுகளை, உணவாக, காடைகள், மன்னா, மென்மையான.**

*(இவ்வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்- 41

(சரியான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. அண்மையில் இந்திய அரசின் ஞானபீட விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்
   (சுந்தரம் இராமசாமி, ரமணிச் சந்திரன், ஜெயகாந்தன்)

2. நடைபெற்று முடிந்த முக்கோணக் கிரிக்கட் தொடரில் பங்குபற்றிய ஆசிய நாடுகளில் ஒன்று
   (பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ்)

3. சுருட்டோடு தன்னைப் பிணைத்துக் கொண்ட உலகப் புகழ் பெற்ற அரசியல் தலைவர்
   (வின்ஸ்ரன் சேர்ச்சில், ஸ்ராலின், ஐசனோவர்)

4. பல்லுப் போனால் இதுவும் போய் விடுமாம்
   (அழகு, இளமை, சொல்லு)

5. 'கதை நேரம்' என்ற அற்புதமான தொலைக்காட்சித் தொடரைத் தந்த இயக்குனர்
   (பாலச்சந்தர், பாலுமகேந்திரா, பாரதிராஜா)

6. மருந்தில்லா மருத்துவமான அக்கியுபஞ்சரை உலகிற்கு வழங்கிய நாடு
   (சீனா, அமெரிக்கா, ஜப்பான்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 41**
**தொண்டன்**
**அ.பெ. எண் 44**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 39 விடைகள்

வன்மையாக, நீர்த்திரள், எகிப்தியர், நடுக்கடல், அணிவகுப்புகளை, தேரோட்டுவது, சார்பாக, குதிரை வீரர், ஆண்டவர், இஸ்ரயேலருக்கு

## அறிவை வளர்ப்போம் - 39 விடைகள்

1) ஹனிமன் 2) 16ம் ஆசீர்வாதப்பர் 3) குறள்
4) விக்கிரமாதித்தன் 5) சீனர் 6) லெனின்

**இருபிரிவுகளுக்கும் சரியான விடைகளை இம்முறை ஒருவர் மட்டுமே எழுதியுள்ளார்.**

**பரிசு 100/=** ▸ ர. திமோத்தியன்
கழுவன்கேணி வீதி,
வந்தாறுமூலை - 30376

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி 50/= பரிசு பெறுவோர்!**

▸ சியூமலின் அரியதுரை
பாத்திமா புரம்
கல்முனை - 01.

▸ கிரேசி போல்
38/6, கொத்தி ஒழுங்கை,
திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்**

▸ M. டிலோசாந்
41/31, 6ம் குறுக்கு
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

▸ சு. புவின்ராஜ்
90/98, 9ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

(விவிலியம் கற்போம் போட்டி 39 க்கான விடையில் 'ஆண்டவர்' என்பது தவறுதலாக 'மோசேயை' என்று பதிவாகியிருந்தது. தவறுக்கு வருந்துகின்றோம். ஆயினும், சில வாசகர்கள் விவிலியத்தின் துணையோடு சரியான சொல்லைத் தெரிந்து எழுதியுள்ளனர். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்)

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் நான்காமாண்டு நினைவு



**மண்ணில் : 31 - 08 - 1944**

**விண்ணில் : 11 - 08 - 2001**

ஆண்டவர் அருளும் நீதியும் கொண்டவர்
நம் கடவுள் இரக்கமுள்ளவர்
என் உயிரைச் சாவினின்று விடுவித்தார்
உயிர் வாழ்வோர் நாட்டில்
நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்
(திருப்பாடல் 116: 5, 8-9)

## ஜெயராணி மாணிக்கராஜா

அன்புப் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார்
உறவினர்கள்

அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு
ஒன்றித்து இறந்தோமெனில, அவர்
உயிர்த்தெழுந்தது
போலவே நாமும் அவரோடு ஒன்றித்து
உயிர்த்தெழுவோம்
(உரோமையார் 6:5)

செபத்தில் ஜெயம் உண்டு
ஜெகத்தில் செபம் ஜெயிக்கும்
உண்மையிது உணருங்கள்,
என உணர்த்திய அம்மாவே

குழந்தை இயேசுவில் குறையில்லாத பக்தி
குடியிருந்தது உங்களில்
குடிகொள்ளச் சென்று விட்டீர்
குவலயத்தை மீட்ட
திருக்குமரன் இயேசுவின் குடியிருப்பிற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள்

செப்டம்பர் – 2005

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – நேரம் காலை 5.50 மணி.**

நாள்: 03, 04, 05, 06 - **வழங்குபவர்:** J. டேவிட்

நாள்: 07, 08, 09 - **வழங்குபவர்:** மெற்றில்டா இராஜேந்திரம்

நாள்: 17, 18, 19, 20 - **வழங்குபவர்:** பெஸ்லீயோ வாஸ்

நாள்: 21, 22, 23 - **வழங்குபவர்:** லூக்காஸ் அலெக்சான்டர்

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) – நேரம் மாலை 06.30 மணி**

நாள்: 13 (புனிதர்களை அறிவோம் - வினாவிடைப் போட்டி
நடத்துபவர்: பாரதிப்பிரியா )

நாள்: 27 - 'கதையும் கருத்தும்'

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) – நேரம் மாலை 6.30 மணி**

நாள்: 11 - 'இறைவார்த்தை வழிபாடு, செய்திகள், போட்டி பாடல்கள்' இன்னும்

நாள்: 25 - தேசீய மறைக்கல்வி தினத்தையொட்டிய சிறப்பு நிகழ்ச்சி.

**தயாரிப்பு:** மறைக்கல்வி நடுநிலையம்,
மட்டக்களப்பு.

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org